


**எகிறியது எரிவாயு விலை!**

விரிவு பக்கம்:- 16


Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41 கதிர் : 105 | புதன்கிழமை 11 மார்ச் 2026 | மாசி 27 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50


## யாழ். போதனாவில் குருதித் தட்டுப்பாடு


### 'ஓ' பொசிடிவ் குருதிக்கு கடும் நெருக்கடி நிலை

யாழ்ப்பாணம், மார்ச் 11
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குருதி வங்கியில் குருதிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும், 'ஓ' பொசிடிவ் குருதிக்கு கடும் நெருக்கடி நிலை தோன்றியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
எனவே, 'ஓ' பொசிடிவ் வகைக் குருதி உடையவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவ »15

தேசியக்கொடி அவமதிப்பு

## யாழ். பல்கலைக்கழகம் மீதான பிடியை இறுக்குகிறது அரசு

### துணைவேந்தர், பதிவாளரிடம் நேற்று விசாரணை




யாழ்ப்பாணம், மார்ச் 11
**ஸ்ரீலங்காவின் சுதந்திர தினத்தன்று, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தேசியக் கொடியைக் கீழிறக்கி கறுப்புக் கொடியை ஏற்றிய விவகாரத்தில் துணைவேந்தர், பதிவாளர் உள்ளிட்டோரிடம் நேற்று விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.** »15

மத்திய கிழக்குப் போர்ச்சூழல்

## பொருளாதார நெருக்கடியை அவதானிக்க விசேட குழு!

### ஜனாதிபதி அநுர நடவடிக்கை



கொழும்பு, மார்ச் 11
மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச்சூழலால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்புக் குறித்து ஆராய்வதற்காக விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு, அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற் »15

குருக்கள்மடம் புதைகுழி

## மார்ச் 30ஆம் திகதியன்று முதற்கட்ட அகழ்வுப்பணி

மட்டக்களப்பு, மார்ச் 11
குருக்கள்மடம் மனிதப் புதைகுழி தொடர்பான அகழ்வுப் பணிகள் எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள் »15

## எரிபொருள் பயன்பாட்டில் சிக்கனத்தைப் பேணுங்கள்

### பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 11
எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள உலகளாவிய நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, எரிபொருள் பயன்பாட்டில்சிக்கனத்தைப் பேணுமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே.ராஜகருணா பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்த »15

ஈரான் கப்பல்மீதான தாக்குதல்

## தகவல்கள் எவற்றையும் தரவில்லை அமெரிக்கா!

### அமைச்சர் நளிந்த வெளிப்படை

கொழும்பு, மார்ச் 11
இந்துமா சமுத்திரத்தில் ஈரான் போர்க்கப்பல்மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில், இலங்கைக்கு அமெரிக்காவால் எந்தத் தகவலும் வழங்கப்படவில்லை என்று, அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித் »15

## ஊர்காவற்றுறையில் விக்கிரகம் உடைப்பு

### சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 11
யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்லக் கதிர்காமம் ஆலயத்தில் விக்கிரகத்தை உடைத்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
குறித்த ஆலயத்துக்குள் நேற்றுமுன்தினம் »15

## நகர்ப்புறப் பகுதிகளிலும் ம.எண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 11
நகர்ப்புறப் பகுதிகளிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான மண்ணெண்ணெய் விநியோகப் பணிகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
மண்ணெண்ணெய்க்கு அண்மைக்காலமாக ஏற்பட்ட தட்டுப்பாட்டைத் »15



## பாலைதீவுப் படகு விபத்து; மேலும் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11
பாலைதீவு அந்தோனியார் ஆலயத்துக்குப் பக்தர்களை ஏற்றிச்சென்றபடகுகடலில்கவிழ்ந்துவிபத்துக்குள்ளானதில், உயிராபத்தான நிலையில் சிகிச்சை பெற்றுவந்த பெண்ணொருவர் நேற்று உயிரிழந்தார்.
உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த எட்வேட் உதயகுமாரி (வயது-64) என்ற வயோதிபப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார். »15

முச்சந்தி முரளி

"அப்ப இனித்தான் உண்மையாவே எரிபொருளுக்குத் தட்டுப்பாடு வரப்போகுதோ?"

## மின்சக்தி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை



கொழும்பு, மார்ச் 11
மின்சக்தி அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் என்று, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.
ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:
நாட்டுக்குள் தரமற்ற நிலக்கரிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இந்தத் தரமற்ற நிலக்கரிகள் மூலம் பெருமளவு பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது. »15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 10.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4371 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 17 29 48 60 |
| விசேட எழுத்து | A |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 10.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1438 |
| வெற்றி இலக்கினம் | தனு |
| வெற்றி இலக்கங்கள் | 09 36 52 57 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 10.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0397 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 5 3 2 2 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 10.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2477 |
| ஆங்கில எழுத்து | X |
| சுப்பர் இலக்கம் | 22 |
| வெற்றி இலக்கங்கள் | 11 19 26 45 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 10.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6129 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 7 2 6 8 9 7 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 10.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2159 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 12 70 76 78 |
| விசேட எழுத்து | A |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 10.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0245 |
| வெற்றி இலக்கினம் | சிம்மம் |
| வெற்றி இலக்கங்கள் | 06 14 18 |

# அஸ்வெசும திட்டப் பயனாளிகள் ஓ.ரி.பி. இலக்கத்தைப் பகிராதீர்!

## யாழ்.மாவட்டச் செயலகம் அறிவிப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 11**

**யாழ். மாவட்டத்தில் அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெறும் பொதுமக்களை இலக்குவைத்துப் புதிய வகை நிதிமோசடிகள் இடம்பெற்றுவருகின்றன. எனவே உங்கள் தொலைபேசிக்கு வரும் எவ்வித இரகசிய இலக்கங்களையும் அறிமுகமில்லாத எவருக்கும் பகிரவேண்டாம் என்று யாழ். மாவட்ட மேலதிக செயலாளர் கை. சிவகரன் அறிவுறுத்தியுள்ளார்.**

அநாமதேய நபர்கள் தொலைபேசி ஊடாகப் பயனாளிகளைத் தொடர்புகொண்டு "உங்களுக்கான அஸ்வெசும கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது" அல்லது "கூடுதல் நிதி வரவுள்ளது" எனக் கூறி உங்கள் தொலைபேசிக்கு வரும் கடவுச்சொல்லை (OTP) தெரிவிக்குமாறு கோருவர். உண்மைத்தன்மை அறியாது பொது மக்கள் அந்த OTP இலக்கத்தை வழங்கியதும், அவர்களது வங்கிக் கணக்கிலிருந்து இணையம் வழியாகப் பணம் திருடப்படுகின்றது.

வங்கி அதிகாரிகளோ அல்லது அஸ்வெசுமத் திட்ட அதிகாரிகளோ ஒருபோதும் தொலைபேசி ஊடாக உங்களிடம் OTP இலக்கத்தைக் கேட்கமாட்டார்கள். உங்கள் தொலைபேசிக்கு வரும் எவ்வித இரகசிய இலக்கங்களையும் அறிமுகமில்லாத எவருக்கும் பகிரவேண்டாம். இவ்வாறான அழைப்புகள் வந்தால், உடனடியாக அதுகுறித்து அருகில் உள்ள பிரதேச செயலகத்திற்கோ அல்லது வங்கிக் கிளைக்கோ நேரடியாகச் சென்று அறிவிக்கவும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-66)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 10.03.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0837 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கம் | 6 4 4 2 0 1 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 10.03.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3103 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கம் | 31 48 71 73 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 10.03.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கம் | 18 34 35 37 |
| வெற்றி வாரம் | 5264 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 10.03.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0933 |
| வெற்றி இலக்கம் | 07 09 31 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 10.03.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ரிஷபம் | |
| வெற்றி இலக்கம் | 14 36 49 62 |
| சீட்டிழுப்பு வாரம் | 4815 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 10.03.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | S |
| சுப்பர் இலக்கம் | 26 |
| வெற்றி இலக்கம் | 40 46 68 72 |
| வெற்றி வாரம் | 2279 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 10.03.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கம் | 24 59 60 74 |
| வெற்றி வாரம் | 2929 |

## பஸ் கட்டணத்தில் மாற்றம் இல்லை

கொழும்பு, மார்ச் 11

எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள போதும், தற்போதைய நிலையில் பஸ் கட்டணங்களை உயர்த்துவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பால் போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்துள்ளன என தனியார் பஸ் சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இருப்பினும் தற்போதைய விலை அதிகரிப்பானது, வருடாந்த பஸ் கட்டணத் திருத்தக் கொள்கையின் கீழ் வரும் சதவீதத்தை எட்டவில்லை என்பதால் கட்டண உயர்வு அவசியமற்றது என ஆணைக்குழு தெரிவித்துள்ளது. நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விடக் கூடுதலாக அறவிடும் பஸ் நடத்துநர்களுக்கு எதிராக பயணிகள் 1955 என்ற அவசர இலக்கத்துக்குத் தொடர்புகொண்டு தெரிவிக்கமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## பிள்ளையானின் மனு இம்மாதம் விசாரணை

கொழும்பு, மார்ச் 11

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் தாம் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருப்பதற்கு எதிராக, கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை இந்த மாதம் 18ஆம் திகதி அழைக்குமாறு உயர்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர், பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர் உள்ளிட்ட குழுவினர் பெயரிடப்பட்டுள்ளனர். (ச-இ)

## அதிகரிக்கப்பட்ட மஹாபொல வங்கிக்கணக்குகளில் வைப்பு

கொழும்பு, மார்ச் 11

அதிகரிக்கப்பட்ட மஹாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவு நேற்று முதல் மாணவர்களின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னர் 7,500 ரூபாவாக இருந்த இந்தக் கொடுப்பனவு, தற்போது 10,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

## ஐஸ் போதையுடன் பெண் கைது

கொழும்பு, மார்ச் 11

கொழும்பு - ரத்மலானைப் பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிரதேச குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. சந்தேகநபரிடமிருந்து 100 கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச-இ)

## ரயிலுடன் மோதுண்டு சுற்றுலாப் பயணி சாவு

களுத்துறை, மார்ச் 11

களுத்துறை பிங்வத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தல்பிட்டிய பாலத்துக்கு அருகில் ரயிலுடன் மோதுண்டு நால்வர் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர் 87 வயதுடைய பிரித்தானிய நாட்டுப் பிரஜை என அடையாளம் காணப்பட்டுள்ளார். ரயில் தண்டவாளத்தில் நின்று புகைப்படம் எடுக்க முயன்ற போதே இந்த விபத்து நேர்ந்துள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ச-இ)

## நாய்களுக்குக் கருத்தடை; நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 11

வேலணைப் பிரதேசசபையின் ஒத்துழைப்புடன் இன்று புதன்கிழமை நயினாதீவுப் பிரதேசசபையின் உப அலுவலகம், யாத்திரிகர் மடம் ஆகியவற்றில் பெண் நாய்களுக்கான இலவசக் கருத்தடைச் சத்திரசிகிச்சை நடமாடும் முகாம் நடத்தப்படவுள்ளது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றரை மாதங்களுக்கான பொருள்கள் கையிருப்பில்!

*வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் தெரிவிப்பு*

**கொழும்பு, மார்ச் 11**
**இலங்கையில் அடுத்த ஒன்றரை மாதங்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப்பொருள்கள் கையிருப்பில் உள்ளன என்று வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஆர்.எம். ஜயவர்தன தெரிவித்துள்ளார்.**

மத்திய கிழக்கில் தீவிரமடைந்துள்ள போர்ப் பதற்றங்கள் காரணமாக உலகளாவிய கப்பல் போக்குவரத்து மற்றும் விநியோகச்சங்கிலியில்பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்த நிலையில் அரிசி, கோதுமை மா, சர்க்கரை மற்றும் பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருள்கள் ஏற்கனவே இறக்குமதிசெய்யப்பட்டுக் கையிருப்பில் உள்ளன என்று பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், கனடா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்து வெங்காயம், பருப்பு வகைகள், ரின் மீன் மற்றும் வாசனைத்திரவியங்கள் வழமையான விநியோகப் பாதைகள் ஊடாகத் தொடர்ந்து கொண்டுவரப்படுகின்றன. கடல்வழி விநியோகப் பாதைகளில் பெரும் இடையூறுகள் இதுவரை ஏற்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## வாளுடன் புகுந்த நபரால் பள்ளிவாசலில் பரபரப்பு

*பொலிஸார் விசாரணை*

யாழ்ப்பாணம், மார்ச் 11
யாழ்ப்பாணம் ஓட்டுமடம் பகுதியில் உள்ள பள்ளிவாசல் ஒன்றில் நேற்றுமுன்தினம் தொழுகை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, வாளுடன் புகுந்த நபரால் பெரும் பரபரப்பு ஏற்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.
பள்ளிவாசலில் இரவுத் தொழுகை இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது வாளுடன் நபர் ஒருவர் வேறொரு இளைஞரைத் துரத்திக்கொண்டு வந்துள்ளார். அந்த இளைஞர் அங்கிருந்த மதிலால் ஏறித் குதித்துத் தப்பிச்சென்றுள்ளார். இந்தநிலையில் வாளுடன் பள்ளிவாசலுக்குள் நுழைந்த சந்தேக நபரை, அங்கிருந்தவர்கள் மடக்கிப் பிடித்து அவரிடமிருந்த வாளைப் பறித்துள்ளனர் எனினும் அவர்களின் பிடியிலிருந்த சந்தேகநபர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார். இந்தச் சம்பவம் குறித்து உடனடியாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த பொலிஸார் பறிமுதல் செய்யப்பட்ட வாளைப் பொறுப்பேற்றதுடன், தப்பியோடிய சந்தேகநபரைத் தேடும் பணிகளை முன்னெடுத்துள்ளனர். (ச-27,66)

## விசேட சுற்றிவளைப்புகளில் 551 சந்தேகநபர்கள் கைது



கொழும்பு, மார்ச் 11
நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்புகளில் 551 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.
30 ஆயிரத்து 835 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், குற்றங்களுடன் நேரடியாகத் தொடர்புடைய 21 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். பிடியாணைகளுக்கமைய 261 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 150 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மதுபோதையில் வாகனம் செலுத்திய 183 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 45 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## போதைப்பொருள்களுடன் தெற்குக் கடலில் படகு மீட்பு



கொழும்பு, மார்ச் 11
இலங்கைக்குத் தெற்கே உள்ள ஆழ்கடல் பகுதியில் போதைப்பொருள் என சந்தேகிக்கப்படும் பொதிகள் மற்றும் ஆயுதங்களை ஏற்றிச்சென்ற பல நெடுநாள் மீன்பிடிப்படகு ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது என்று கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.
கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையொன்றின் போது, சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த இந்தப் படகினைச்சோதனையிட்ட போது இந்தச் சட்டவிரோத பொருள்கள் கண்டறியப்பட்டுள்ளன. தற்போது அந்தப் படகு மற்றும் அதிலிருந்த பொருள்கள் மேலதிக விசாரணைகளுக்காகவும், சட்டரீதியான நடவடிக்கைகளுக்காகவும் கரைக்குக் கொண்டுவரப்படுகின்றது என்றும் கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

## முதலியார்மட ஆதனம் கையளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 11
கீரிமலை புனித தீர்த்தக்கரை தண்டிகை கனக நாயக முதலியார்மட ஆதனம் கையளிக்கும் நிகழ்வு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரை தெய்வங்கள் இளைப்பாறும் மண்டபத்தில் வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-66)




## கட்டப்பொம்மை சொன்னதெல்லாம் பொய்!

*'நெய் ...நெய்*
*அரைப்போத்தல் நெய்*
*கட்டப்பொம்மை சொன்னதெல்லாம்*
*பொய்...பொய்...!'*

**எ**ண்டு சின்னப்பிள்ளையள் ஒரு பாட்டுப்படிச்சு விளையாடுறதைப் பார்த்திருப்பியள். அப்பிடி ஒரு எண்ணெய் விசயத்தில பொய் சொல்லிக் காட்டிக்குடுத்து திசைகாட்டித் திலகமொண்டு மூக்குடைபட்ட விசயத்தைச் சொல்லியே ஆகோணும். பெற்றோலுக்கும், மண்ணெண்ணெய்க்கும் தட்டுப்பாடு வந்ததால, ஆரும் அதைப் பதுக்கிவைச்சிருந்தால் வீடுகளில வந்து செக் பண்ணி பிடிப்பம் எண்டு அரசாங்கம் அறிவிச்சதெல்லோ. அது இப்பிடி அடுத்தவையில பழிபோடக் காத்திருந்த திசைகாட்டித் திலகங்களுக்கு ரொபி மாதிரி இனிச்சிருக்கு. வந்த சான்ஸை அவை விடுவினமோ? அதால வரிஞ்சு கட்டிக்கொண்டு, தங்களுக்கு எதிரான ஆக்களைப் பற்றி 'அவை பெற்றோல் பதுக்குகினம், இவை மண்ணெண்ணெய் பதுக்குகினம்' எண்டு போட்டுக் குடுக்கத் தொடங்கிட்டினம். அப்பிடிப் பருத்தித்துறையில சைக்கிள் கட்சிக்கு சப்போர்ட் பண்ணிற பொம்பிளை ஒராள் எண்ணூறு லீற்றர் மண்ணெண்ணெய் பதுக்கிவைச்சிருக்கிறா எண்டு சொல்லிக் குடுக்க, எஸ்.ரி.எப்.காரரும் ( விசேட அதிரடிப்படை) விழுந்தடிச்சுக்கொண்டு நடுச்சாமத்தில அவான்ர வீட்ட வந்திட்டினம்.

உண்மையில அவான்ர வீட்டில எண்ணூறு லீற்றர் மண்ணெண்ணெய் இருந்ததுதான். ஆனால் அது பதுக்கிவைச்ச எண்ணெய் இல்லை. பருத்தித்துறையில மீனவர் சங்கங்களில இருக்கிறவைக்கு கடற்றொழில் செய்யிற படகுகளுக்கெண்டு மானிய விலையில மண்ணெண்ணெய் குடுக்கிறவை. அந்தப் பொம்பிளைதான் ஒரு மீனவர் சங்கத்தின்ர பொருளாளரா இருக்கிறா. அவாவும் மூண்டு 'போட்' வைச்சு கடற்றொழில் செய்விக்கிறா. அதால அவாக்கு மானியமாக் கிடைச்ச மண்ணெண்ணெயும், இன்னும் கொஞ்சப் பேருக்கு குடுக்கவேண்டிய எண்ணெயுமாச் சேர்த்துத்தான் உந்த எண்ணூறு லீற்றர் மண்ணெண்ணெய் அங்க இருந்திருக்கு. அந்த எண்ணெய் எப்ப தந்தது? ஆருக்குக் குடுத்தது? ஆருக்கு இன்னும் குடுக்காமல் இருக்குது?எண்டதுக்கெல்லாம் அவாட்ட பில்லுகள், ரிசீற்றுகள் இருந்திருக்கு. எண்டாலும் எஸ்.ரி.எப்.காரர் 'உது பதுக்கிவைச்ச எண்ணெய்தான்' எண்டு சொல்லி அவ்வளத்தையும் கொண்டுபோகவும், அவாவை அரஸ்ட் பண்ணவும் ரெடியாகிட்டினம். இத்தனைக்கும் தனிய பொம்பிளையாக்கள் இருக்கிற அந்த வீட்டில செக் பண்ண வந்த பொலிஸில ஒரு பொம்பிளைப் பொலிஸ் கூட இல்லாமல் தான் அந்த நடுச்சாமத்தில வந்து அதுவும் சிவில் உடுப்பில வந்து அட்டகாசம் போட்டிருக்கினம்.

கடைசியில 'இது சங்கத்தின்ர எண்ணெய். என்னை நம்பி தந்திட்டுப் போயிருக்கினம். இதைக் கொண்டு போகப் போறியள் எண்டால் நானும் பிள்ளையளும் இந்த இடத்திலேயே உந்த மண்ணெண்ணெயை ஊத்தி எரிஞ்சு சாவம்' எண்டு அந்தப் பொம்பிளைப் பொருளாளர் சொன்னபிறகுதான், சிவில் உடுப்பில வந்த எஸ்.ரி.எப்.காரர் பின்வாங்கி இருக்கினம். அவை அங்க நிக்கேக்க, அடிக்கடி கோல் எடுத்து ஒராள் ஓர்டர் போட்டுக் கொண்டிருந்தவராம். அந்த ஏரியாவுக்குப் பிரஜாசக்தி உறுப்பினராப் போட்ட திசைகாட்டித் திலகம் தான் அப்பிடிக் காட்டிக் குடுத்ததுமில்லாமல், போனில கண்காணிச்சுக் கொண்டுமிருந்தவராம். அதைவிட இந்த விசயத்தை அவர் யாழ்ப்பாண எம்.பி.ஒராளின்ர றைவருக்கும் சொல்ல, அந்த றைவர் '500 லீற்றர் மண்ணெண்ணெய் பிடிபட்டது' எண்டு தன்ர பேஸ்புக்கில போட்டு விலாசமெழுப்ப வெளிக்கிட்டிட்டார். ஆனால் கடைசியில எல்லா டொக்கிமெண்டும் பக்காவா இருந்ததால எஸ்.ரி.எப்.காரர் 'இந்த மண்ணெண்ணெய் பழைய ஸ்டொக் தான், ஒரு பிரச்சினையுமில்லை' எண்டு எழுதிக் குடுத்துட்டுப் போட்டினமாம். திசைகாட்டி எண்டால் சரியான வழியைக் காட்டவேணுமே தவிர இப்பிடி ஆதாரமில்லாமல் அடுத்த வையைக் காட்டிக் குடுத்து புளுகப்படக்கூடாது கண்டியளோ.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், மார்ச் 11

இலங்கை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், நாடளாவியரீதியில் இந்து சமயம், தமிழ் மொழி மற்றும் கலைத்துறைகளில் தேர்ச்சி பெற்ற வல்லுநர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

அதன் கலைகள் மற்றும் துறைகளில் பயிற்சி வழங்கக்கூடிய வளவாளர்கள், ஆய்வியலாளர்கள், பயிற்சிநெறியாளர்கள், கட்டுரையாளர்கள் மற்றும் நடுவர்கள் விண்ணப்பிக்கமுடியும்.

தகுதியுடையோர் தமது சுயவிபரக் கோவையை உரிய ஆவணங்களுடன் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் 'துறைசார் வளவாளர் விண்ணப்பம் கோரல் 2026' எனக் குறிப்பிடப்பட்டு, பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு 10க்கு எதிர்வரும் 31.03.2026ஆம் திகதிக்கு முன்பதாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-60)

# மெய்வல்லுநர் திறனாய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 11

கைதடி விக்னேஸ்வர வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நாளை வியாழக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் நாகலிங்கம் கருணாகரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய கணக்காளர் சோமசுந்தரம் பிரபுவும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் நடராசா ஜெயரூபனும், கௌரவ விருந்தினராக தென்மராட்சி வலய சமயபாட ஆசிரிய ஆலோசகர் வேலாயுதபிள்ளை கமலேஸ்வரனும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஏ-41)

# தவறான முடிவெடுத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழ்., மார்ச் 11



தவறான முடிவெடுத்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிர் மாய்த்துள்ளார். டச்சுவீதி, பெரியவிளான், இளவாலை பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். (ச-27)

# இரக்கத்தின் குறியீடுகளாவோம்

மிகவும் கோலாகலமாக நிகழ்ந்துகொண்டிருந்த திருமண நிகழ்வொன்றில் நாவூறவைக்கும் அறுசுவை உணவுகள் பரிமாறப்பட்டுக்கொண்டிருந்தன. மண்டப வாசலில் பல நாள்களாக உணவைக் காணாத ஏழைச்சிறுவன் ஒருவன் தன் வயிற்றை நிரப்பிக் கொள்ள உள்ளே நுழைய முயற்சித்தான். வாயிற் காவலன் அவனை அதட்டி விரட்டிக்கொண்டிருந்தான். உள்ளே உணவு பரிமாறும் இடத்தில் தட்டில் உணவு எடுத்துக்கொண்டிருந்த ஒரு சிறுவன் இரக்கம் கொண்டு தன் உணவை ஏழைச்சிறுவனுக்குக் கொடுத்தான். விருந்தினர்கள் குற்ற உணர்வால் மௌனித்திருந்தனர். அன்று அந்த ஏழைச்சிறுவனுக்கு கடவுளாக இவன் தென்பட்டான்.

அனைத்து மதங்களும் அன்பையும், இரக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டே கடவுள் இவ்வுலகில் செயலாற்றுகிறார் என்பதையே போதிக்கின்றன. வீதிவிபத்தில் சிக்கி உதவியின்றித் தவிக்கின்ற போது தோள் கொடுத்து உதவினால் 'கடவுள் போன்று வந்தார்' என்று கூறுகின்றோம். கைவிடப்பட்ட நோயாளியின் உயிரைக் காத்த மருத்துவரைக் கடவுள் வடிவில் காண்கிறோம். டித்வா துயரில் உயிர்காப்புப் பணியில் ஈடுபட்டோர் உயிர் மீண்டோருக்கு இறைவடிவங்களாகத் தோன்றினர். ஈரானியப் போர்க்கப்பலில் உயிருக்காகப் போராடியோரை மீட்டமை இறைவனின் அன்பை வெளிப்படுத்தியது. ஏனெனில் கடவுளின் மறுபெயர் இரக்கம். இதனை நிறைவேற்றவே இறைமகன் கிறிஸ்து உலகிற்கு வந்தார். நாமும் எமது பெயருக்கு இரக்கத்தை அடைமொழியாக்கி விண்ணக வாழ்வை எமதாக்குவோம்.

● எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை

# வடக்கில் முதன்முறையாக இசைநாடக கூத்து திருவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 11

வடமாகாணத்தின் கலைப் பாரம்பரியத்தைப் பறைசாற்றும் வகையில், முதன்முறையாகப் பிரம்மாண்டமான பாரம்பரிய இசைநாடக கூத்துத் திருவிழா எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை பளை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் நலிந்து வரும் கூத்துக் கலையை மீண்டும் உயிர்ப்பிக்கவும், கலைஞர்களை ஊக்குவிக்கவும் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வடமாகாணத்தின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த முன்னணி கூத்துக் கலைஞர்கள் மற்றும் கூத்து அணிகள் இந்த விழாவில் பங்கேற்றுத் தமது கலைத் திறமைகளை வெளிப்படுத்தவுள்ளனர்.

மண்ணின் கலைகளைப் பாதுகாக்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் இந்த விழாவில், பாரம்பரிய இசைநாடகக் கலை ஆர்வலர்கள், பொது மக்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச-9)

# மானிப்பாய் இந்துவின் விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச் 11

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு, கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. பாடசாலை அதிபர் ரி.திலீப்குமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக மகப்பேற்று நிபுணர் மருத்துவக் கலாநிதி அ.சிறீதரன் (பழைய மாணவர்), கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் எஸ். தயாநந்தி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# மெய்வல்லுநர் திறனாய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 11

கச்சாய் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு இன்று புதன்கிழமை பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் பதில் அதிபர் ந.கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.ஸ்ரீகுமரனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலய விவசாய பாட வளவாளர் ந.நவாஞ்சனும், கௌரவ விருந்தினர்களாக பழையமாணவர்கள் பொ.செல்லப்பா, ர.விஜயகுமாரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஏ-41)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிலும் பொறுமையைக்கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள்.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையின்மூலம் ஆதாயம் கிடைக்கும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும்.

**கன்னி:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக அமையும். குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வழிபடுவீர்கள். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது. வெளியூர்ப் பயணங்களைத் தவிர்த்துவிடவும். பிற்பகலுக்கு மேல் காரியங்களில் அனுகூலம் உண்டாகும்.

**தனுசு:** உற்சாகமான நாள். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும்.

**மகரம்:** புதிய முயற்சிகளையும் பயணங்களையும் தவிர்க்கவும். சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், உரிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும்.

**கும்பம்:** மகிழ்ச்சி தரும் நாள். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகமுடியும். உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# இலங்கையைச் சூழும் ஆபத்து!

மத்திய கிழக்கில் தொடரும் போர்ச்சூழல், தற்போது பிராந்திய எல்லையைத் தாண்டி உலகளாவிய ரீதியில் பொருளாதார அதிர்வுகளை ஏற்படுத்தி வருகின்றது. எரிபொருள் விநியோகத்தின் இதயம் போன்ற இந்தப் பிராந்தியத்தில் ஏற்படும் ஒவ்வொரு மோதலும், உலக நாடுகளின் எரிசக்தி பாதுகாப்பு மற்றும் விநியோகச்சங்கிலியில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பிரதானமாக பொருளாதார மீட்சியை நோக்கிப் பயணிக்கும் இலங்கை போன்ற நாடுகளுக்கு இது ஒரு பெரும் சவாலாகும். மத்திய கிழக்குப் போர்ப்பதற்றம் காரணமாக உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை சடுதியாக அதிகரித்துள்ளது. ஹோர்மூஸ் நீரிணைஊடான கப்பல் போக்குவரத்துத் தடைகள் காரணமாகக் காப்புறுதிச்செலவுகள் மற்றும் கப்பல் கட்டணங்கள் உயர்ந்துள்ளன. இது உலகளாவிய ரீதியில் பணவீக்கத்தை அதிகரிப்பதுடன், வளர்ந்த நாடுகளின் மத்திய வங்கிகள் வட்டி விகிதங்களைக் குறைக்க எடுக்கும் முயற்சிகளையும் முடக்கியுள்ளது. இலங்கையைப் பொறுத்தமட்டில், இந்தப் பூகோள அரசியல் நெருக்கடி மூன்று முக்கியமான வழிகளில் தாக்கத்தைச் செலுத்துகின்றது.

எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டண உயர்வு, அந்நியச்செலாவணி, ஏற்றுமதிச்சரிவு போன்றவை இலங்கையை நேரடியாகத் தாக்கும் அபாயம் இருக்கின்றது. கச்சா எண்ணெய் விலையேற்றம் உள்நாட்டில் டீசல், பெற்றோல் விலைகளை உயர்த்துவதுடன், அனல் மின் உற்பத்திக்கான செலவையும் அதிகரிக்கும். இது போக்குவரத்து முதல் உற்பத்தித்துறை வரை அனைத்திலும் விலையேற்றத்தை ஏற்படுத்தும். வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களில் பெரும் பகுதியினர் மத்திய கிழக்கு நாடுகளிலேயே உள்ளதால் இலங்கைக்குக் கிடைக்கும் அந்நியச் செலாவணி-'புலம்பெயர் தொழிலாளர் பணப் பாய்ச்சல்'-பெருமளவில் வீழ்ச்சியடையும். அதே போன்று இலங்கையின் தேயிலை மற்றும் ஆடை ஏற்றுமதிக்கான பிரதான சந்தையாக மத்திய கிழக்கு நாடுகள் உள்ளன. போர்ச்சூழல் மக்களின் கொள்வனவு சக்தியைக் குறைப்பதால், இலங்கையின் ஏற்றுமதி வருமானம் பாதிக்கப்படும்.

இந்த அபாயகரமான சூழலை எதிர்கொள்ள இலங்கை அரசாங்கம் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் உடனடி மற்றும் நீண்டகாலத் திட்டங்களை வகுக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர். இறக்குமதி செய்யப்படும் எரிபொருளில் தங்கியிருப்பதை விடுத்து, புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களைத் துரிதப்படுத்தவேண்டியதன் அவசியத்தை இந்தப்போர் வெளிப்படுத்தியிருக்கின்றது. மத்திய கிழக்குக்கு மாற்றாக ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகளில் தொழில்வாய்ப்புகளைக் கண்டறிந்து, தொழிலாளர்களை அங்கு அனுப்புவதன் அவசியமும் புலனாகியிருக்கின்றது. அதைப்போன்று அத்தியாவசிய உணவுப்பொருள்களுக்காக இறக்குமதியில் தங்கியிருப்பதைத் தவிர்த்து, உள்நாட்டு விவசாய உற்பத்திகளை அதிகரிக்கவேண்டிய கட்டாயமும் ஏற்பட்டிருக்கின்றது.

மத்திய கிழக்கில் ஏற்பட்டிருக்கும் போர்ச்சூழல், 'தன்னிறைவு' மற்றும் 'சார்பற்ற பொருளாதாரத்தின்' அவசியத்தை மீண்டும் ஒருமுறை உரக்கச் சொல்லியிருக்கின்றது. தற்போதைய நெருக்கடிகளுக்குத் தீர்வுகளைத் தேடுவதோடு நின்றுவிடாமல், எதிர்காலப் பாதிப்புகளைத் தாங்கும் வலிமையுள்ள பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்குவதே இன்றைய காலத்தின் கட்டாயமாகும். கொள்கை வகுப்பாளர்கள் குறுகிய காலத் தீர்வுகளைத் தாண்டி, நீண்டகாலப் பொருளாதாரப் பாதுகாப்பை உறுதிசெய்ய உடனடியாக நகரவேண்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






## பொய்யாமொழி

**தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது**

**பொருள்:** தம் மக்களின் அறிவுடைமை, தமக்கு இன்பம் பயப்பதைவிட உலகத்து உயிர்களுக்கெல்லாம் மிகுந்த இன்பம் பயப்பதாகும்.



# மின் விநியோகப் பொறுப்புகள் புதிய நிறுவனத்திடம் கையளிப்பு

*இலங்கை மின்சாரசபை அறிவிப்பு*

**கொழும்பு, மார்ச் 11**
**2024ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க மின்சாரச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக, இலங்கை மின்சாரசபையின் மின் விநியோகப்பணிகள் இனி எலக்ட்ரிசிட்டி டிஸ்ட்ரிபியூஷன் லங்கா (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தால் (EDL) முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

இலங்கை மின்சாரசபை இதுவரை மின் உற்பத்தி, கடத்தல் மற்றும் விநியோகம் ஆகிய மூன்றையும் கவனித்து வந்தது. மின்சாரத்தை நுகர்வோரின் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்குக் கொண்டுசேர்க்கும் முழுமையான பொறுப்பு இனி ஈ.டி.எல். நிறுவனத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. விநியோகத்துறையில் செயற்பாட்டு மேம்பாடுகளைச் செய்யவும், புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்தவும் இந்த நிறுவனத்துக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க மின்சாரச் சட்டத்தின் மூலம் மின்சக்தித் துறையைத் தனித்தனிப் பிரிவுகளாகப் பிரித்து, அவற்றின் வினைத் திறனை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்தது.

அதன் ஒரு கட்டமாகவே இந்த ஈ.டீ. எல். (Electricity Distribution Lanka) நிறுவனம் உருவாக்கப்பட்டு, விநியோகப் பொறுப்புகள் அதனிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (ச-இ)

## பாடசாலைப் போக்குவரத்துக் கட்டணம் அதிகரிப்பு


பாடசாலைப் போக்குவரத்துக் கட்டணங்களை நேற்று முதல் ஐந்து சதவீதத்தால் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அகில இலங்கை பாடசாலை சிறுவர் போக்குவரத்துச் சங்கம் தெரிவித்துள்ளது. எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், தொடர்புடைய ஏனைய சங்கங்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் அந்தச் சங்கத்தின் தலைவர் லலித் சந்திரசிறி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (எ-இ)

## தங்கத்தின் விலை உயர்வு

கொழும்பு, மார்ச் 11
நேற்றுமுன்தினம் தங்கத்தின் விலை 4 ஆயிரம் ரூபாவால் குறைந்திருந்த நிலையில், நேற்றுத் தங்கத்தின் விலை 7 ஆயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. நேற்று 24 கரட் தங்கம் பவுண் ஒன்று 4 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்பட்டுள்ளது. 22 கரட் தங்கம் பவுண் ஒன்று 3 இலட்சத்து 83 ஆயிரத்து 800 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டுள்ளது. (எ-இ)

## அனலைதீவில் மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 11
அனலைதீவு பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவ முகாம் அனலைதீவு மனோன்மணி கோவிலில் (ஆச்சி கோவில்) இன்று காலை 8 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளது. பொதுமக்கள் கலந்துகொண்டு பயன்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)



## மாற்றுப்பாதைகளில் விமான சேவைகள்

கொழும்பு, மார்ச் 11
மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவும் போர்ச்சூழல் காரணமாக வான் பரப்புகள் மூடப்பட்டுள்ள நிலையில், ஶ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம் தனது ஐரோப்பிய சேவைகளுக்காக ஆப்கானிஸ்தான் மற்றும் அஸர்பைஜான் ஊடாக மாற்றுப் பாதையைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் தமிந்த ரம்புவெல்ல கருத்துத் தெரிவிக்கையில், இந்த மாற்றுப்பாதை காரணமாக லண்டன் போன்ற நகரங்களுக்கான பயணநேரம் ஒன்றரை மணித்தியாலங்களால் அதிகரித்துள்ளது என்று குறிப்பிட்டார்.

இந்தத் திடீர் மாற்றங்களால் விமான நிறுவனத்திற்கு ஏற்படக்கூடிய நிதி இழப்பு பெரியளவில் இருக்கும் எனக் கருதப்பட்டாலும், அதன் துல்லியமான பெறுமதி இன்னும் கணக்கிடப்படவில்லை. (எ-இ)

நாளை
வியாழக்கிழமை - மாசி 28
12.03.2026
சுபநேரம் : 07.52 - 09.22
ராகுகாலம் : 01.52 - 03.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையிலுள்ள ஈரான் மாலுமிகள் ஒருபோதும் விடுவிக்கப்படக்கூடாது!

## அமெரிக்கா அழுத்தம் இலங்கைக்கு 'அக்கினிப் பரீட்சை'

**கொழும்பு, மார்ச் 11**
**இலங்கைக் கடல் எல்லையில் அமெரிக்காவால் மூழ்கடிக்கப்பட்ட ஈரானியப் போர்க் கப்பலில் இருந்து மீட்கப்பட்ட மாலுமிகளை மீண்டும் ஈரானுக்கு அனுப்பக்கூடாது என கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் இலங்கை அரசாங்கத்துக்கு வலியுறுத்தியுள்ளது.**

அமெரிக்கத் தூதரகத்தின் வர்த்தகப் பிரதிநிதி ஜேன் ஹோவெல் இது குறித்து தெரிவிக்கையில்,

காலியில் இருந்து 19 கடல் மைல் தொலைவில் ஈரானின் போர்க்கப்பலை அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று தாக்கி மூழ்கடித்தது. இதில் 32 மாலுமிகள் இலங்கையினால் மீட்கப்பட்டனர்.

அத்துடன் இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயத்தில் சிக்கியிருந்த ஈரானின் மற்றொரு போர்க் கப்பலில் இருந்த 208 மாலுமிகளையும் இலங்கைக் கடற்படை மீட்டுத் திருகோணமலைக்கு அழைத்து வந்துள்ளது. எனவே மீட்கப்பட்ட 240 மாலுமிகளையும் எக்காரணம் கொண்டும் ஈரானுக்குத் திருப்பி அனுப்பக்கூடாது. விடுவிக்கப்படும் மாலுமிகளை ஈரான் தனது போர் நடவடிக்கைகளுக்காகவோ அல்லது ஏனைய தேவைகளுக்காகவோ பயன்படுத்துவதைத் தடுக்க இலங்கை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். அமெரிக்காவின் இந்த அழுத்தம் இலங்கை அரசாங்கத்தைச் சர்வதேச அரங்கில் ஒரு இக்கட்டான நிலைக்குத் தள்ளியுள்ளது. ஒருபுறம் ஈரானுடன் கொண்டுள்ள இராஜதந்திர உறவு, மறுபுறம் அமெரிக்காவின் கடும் அழுத்தம் என இலங்கை ஒரு 'அக்கினிப் பரீட்சையை' எதிர்கொண்டுள்ளது. (ச-இ)

# கஞ்சாவுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 11
ஊர்க்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கேரளக் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஊர்க்காவற்றுறை நீதிமன்றத்துக்கு முன்பாகவுள்ள உணவகம் ஒன்றில் கடந்த வெள்ளிக்கிழமை சந்தேகத்துக்கிடமான முறையில் இளைஞர் ஒருவர் நின்று கொண்டிருந்தார். அந்த இடத்துக்குப் பொலிஸார் வருவதைக் கண்டதும், அந்த நபர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார். இதனால் சந்தேகமடைந்த பொலிஸார் அவரைத் துரத்திச் சென்று மடக்கிப்பிடித்தனர். அவரிடம் நடத்திய சோதனையில், அவரது உடைமையில் 5 கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டது. அத்துடன் அன்றையதினம் அதே பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுவிடண் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு சோதனையின் போது 300 மில்லிகிராம் கேரள கஞ்சாவை தனது உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மற்றுமொரு நபர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட இருவரும் தற்போது பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை ஊர்க்காவற்றுறை நீதிமன்றத் தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-23)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 11
பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் பொது மருத்துவ நிபுணர் செல்லத்துரை பிரசாத் எழுதிய, மாரடைப்பு நோய் (பொதுமக்களுக்கான ஒரு வழிகாட்டி) நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு, பருத்தித்துறை சூரியமஹால் மண்டபத்தில் நடைபெறும். பொது மருத்துவ நிபுணர் க.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெறும் நிகழ்வில், நூல் வெளியீட்டுரையை யாழ். போதனா மருத்துவமனை பொதுமருத்துவ நிபுணர் சி.சிவன்சுதன் ஆற்றுவார். (க)



# மத்திய கிழக்கு போர்ச்சூழல் எம்மையும் சூழ்ந்துள்ளது!

## பொதுமக்கள் பாதுகாப்புப் பிரதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 11
நாம் போர் நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளோம். இலங்கை நேரடியாகப் போரில் ஈடுபடாவிட்டாலும், அதன் தாக்கம் நாட்டைச் சூழ்ந்துள்ளது. இதனால்தான் நாம் எப்போதும் தயாராக இருக்கவேண்டும் என்று பொதுமக்கள் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது-
ஈரானியப் போர்க்கப்பல் மீதான தாக்குதலின் நேரடிப் பாதிப்பை இலங்கை அனுபவித்துள்ளது.
ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் எங்கோ நடக்கும் ஒரு யுத்தத்தினால், எமது கராபிட்டிய மருத்துவமனை சடலங்களால் நிரம்புவதற்கு வெறும் ஒரே ஒரு நாள் போதுமானதாக இருந்தது.
உலகில் யார், எப்போது, எவ்வாறு பாதிக்கப்படுவார்கள் என்பதை எதிர்வுகூறமுடியாத ஒரு நிலைமை உருவாகியுள்ளது. நாங்கள் விரும்பாத ஒரு சூழலுக்கு மத்தியிலும், நாடு ஒருவித போர் நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது. இதனால்தான் நாம் எப்போதும் தயாராக இருக்கவேண்டும். முன்னெச்சரிக்கைப் பாதுகாப்பு உபாயங்களைப் பயன்படுத்தவேண்டும்.
அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தவதன் மூலம் எமக்கு இஸ்ரேலின் 'அயர்ன் டோம்' போன்ற ஏவுகணை எதிர்ப்புப் பாதுகாப்புக்கவசம் கிடைத்துவிடப் போவதில்லை. ஆனால், எம்மால் முடிந்தவரை சட்ட ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் ஒரு நெருக்கடி நிலையை எதிர்கொள்ளத் தயாராவதற்கான வாய்ப்பு இதன் மூலம் கிடைக்கும்-என்றார். (ச-இ)

# சர்வதேசம் ஆதரித்தால் தமிழர் தேசம் அமையும்



## பெங்களூரில் இடம்பெற்ற நிகழ்வில் முன்னாள் எம்.பி. சரவணபவன் பேச்சு


பெங்களூர், மார்ச் 11
உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடாக இருக்கும் இந்தியா உட்பட உலக நாடுகள் தமிழர்களின் உரிமையை நிலைநாட்ட உறுதி பூண்டு ஒன்றிணைந்தால், தமிழ்த் தேசியம் அமையும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார்.
கர்நாடக தமிழ்ப் பத்திரிகையாளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இதழியல் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் இலங்கை நாடாளுமன்றத்தின் முன்னாள் உறுப்பினரும் உதயன் பத்திரிகையின் நிர்வாக இயக்குநருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் கலந்துகொண்டார். அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது-
சொந்த மண்ணிலிருந்து வெளியில் வந்து கர்நாடக மண்ணில் தமிழர்களைச் சந்திப்பது மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது. தமிழ்நாட்டைக் கடந்து, கர்நாடக மாநிலத்தில் தமிழ்ப் பத்திரிகையாளர் சங்கம், சிறப்பான நூலகம் அமைத்து சேவை செய்துவருவது பாராட்டக்கூடிய விடயம். இலங்கை மண்ணில் தமிழ்த்தேசம் அமையவேண்டும் என்ற எங்களின் அரை நூற்றாண்டு காலக் கனவு தற்போது குறைந்துபோய் இருந்தாலும் அதற்காக சிந்தப்பட்ட இரத்தம், கொட்டிய வியர்வை, இழந்த உயிர்கள், பறிக்கப்பட்ட உரிமைகள், அனுபவித்த கொடுமைகள் இன்னும் எங்கள் உள்ளங்களில் இருந்து மறையவில்லை.
இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி உயிருடன் இருந்திருந்தால், நிச்சயம் தமிழீழம் மலர்ந்திருக்கும். இந்திராகாந்தியின் மறைவால், தமிழ்த்தேசம் அமையும் கனவு சிதைந்துவிட்டது. தமிழ்த்தேசம் அமையவேண்டும் என்பது இலங்கையில் வாழும் தமிழர்களின் விருப்பமாக மட்டுமில்லாமல், இந்தியா உட்பட உலகில் பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்களின் விருப்பமாகவும் உள்ளது.
இந்த விருப்பம் நிறைவேறவேண்டுமானால், இந்தியா உட்பட உலக நாடுகள் உதவிக்கரம் நீட்டவேண்டும். உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடாக இருக்கும் இந்தியா, தமிழ்த்தேசம் அமைவதற்கான வழியைக் காட்டவேண்டும். தமிழ்த்தேசம் அமைய நாங்கள் அதிகமான போராளிகளை எமது தேசத்தில் விதைத்துள்ளோம்.
அது கண்டிப்பாக ஒருநாள் முளைத்து மலரும் என்ற நம்பிக்கை உள்ளது-என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார விதிமுறைகள் மீறல்; 5 உணவகங்களுக்குத் தண்டம்

**சாவகச்சேரி, மார்ச் 11**

**சுகாதார விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட 5 உணவுக் கையாளும் நிலையங்களுக்கு, சாவகச்சேரி நீதிமன்றால், 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.**



தென்மராட்சிப் பிரதேசத்தில் இரவு வியாபாரத்தில் ஈடுபடும் உணவகங்கள் மீது, சுகாதார மருத்துவ அதிகாரி பணியக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இரு குழுக்களாகத் திடீர்ப் பரிசோதனைகளை நடத்தினர்.

அதன்போது சுகாதார விதிமுறைகளுக்கு மாறாக மிகவும் மோசமாக இயங்கிய 5 உணவகங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக, சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகள் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டன. விசாரணையின் போது வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து, 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அதேவேளை குடியிருப்புகளில் டெங்குக் கட்டுப்பாட்டு களப்பரிசோதனையில் ஈடுபட்ட வேளையில், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் விடுத்த எச்சரிக்கையை மீறிச் செயற்பட்ட இரு குடியிருப்பவர்களுக்கு, சாவகச்சேரி நீதிமன்றால் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (க-9)

# கடல் எல்லையில் தாக்குதல் அரசு கண்மூடியிருந்ததா?

## எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி

கொழும்பு, மார்ச் 11

தேசிய பாதுகாப்பு உச்சகட்டத்தில் இருப்பதாகக் கூறிக்கொண்டு, எமது கடல் எல்லைக்கு அருகில் ஈரானியக் கப்பல் தாக்கப்பட்டதை அரசாங்கம் அறியாமல் இருந்தது மிகப்பெரிய பாதுகாப்புத் தோல்வி. இதற்கு அரசாங்கம் ஒரு வார்த்தையேனும் பேசாமல் மௌனம் காப்பது ஏன்? - இவ்வாறு நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்பு மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வியெழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய பாதுகாப்புச் சபையைக் கூட்டி பாதுகாப்பு பலமாக இருப்பதாகக் கூறும் அரசாங்கத்திற்கு, அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் எமது பொருளாதார வலயத்துக்குள் நுழைந்தது தெரியவில்லையா? ஈரானியக் கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டு அது அழியும் வரை அரசு மௌனமாக இருந்தது ஏன்? இவ்வாறான நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்டறியும் தொழில்நுட்பம் எம்மிடம் இல்லையா? முதலாவது ஈரானியக் கப்பலில் இருந்த 130 பேர் எமது கடல் வலயத்திலேயே உயிரிழந்துள்ளனர். இது தேசிய பாதுகாப்புக்கு நேர்ந்துள்ள அவலநிலை. நீரிணை மூடப்படாது என வெளிவிவகார அமைச்சர் கூறியிருந்தார். ஆனால் தற்போது அது மூடப்பட்டுள்ளதால் எண்ணெய் கொள் வனவில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்க இந்தியாவுக்கு அமெரிக்கா 30 நாள்கள் விலக்கு அளித்துள்ளது. நாமும் ஒரு பிரதிநிதிகள் குழுவை இந்தியா மற்றும் ரஷ்யாவுக்கு அனுப்பி எரிபொருளைப் பெற நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றார். (ச-இ)

# சொற்பொழிவு


யாழ்ப்பாணம், மார்ச் 11

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணப் படனத் தொடரின் 47ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவநெறிப்பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இந்த நிகழ்வு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)



மேல் மருவத்தூர் பங்காரு அம்மா அடிகளின் அவதார தினத்தை முன்னிட்டு ஊரெழு கணேச வித்தியாசாலையில் தெரிவுசெய்யப்பட்ட 30 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெற்றது. மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களுக்கு குப்பிழானைச் சேர்ந்த கலைச்செல்வி திருக்குமார் குடும்பத்தினர் நிதியுதவியளித்தனர். (ச)



# ஆறு அடி உயரமான சிவலிங்கம் புஸ்ஸல்லாவையில் பிரதிஷ்டை

கொழும்பு, மார்ச் 11

இலங்கையின் மிக உயரமான 6 அடி உயர சிவலிங்கம், புஸ்ஸல்லாவையில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட 16 அடி உயரமான பிரம்மாண்ட பிள்ளையார் சிலையுடன், 6 அடி சிவலிங்கமும் புஸ்ஸல்லாவை, குபேரப்பட்டி ஸ்ரீ மகா கணபதி கற்பக விநாயகர் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

இந்தச் சிலைகள் இலங்கையில் அமையப்பெற்றுள்ள மிக உயரமான சிலைகள் எனக் கருதப்படுகின்றன. (க)



# காங்கேசன்துறையில் மரநடுகை

யாழ்ப்பாணம், மார்ச் 11

வலிகாமம் வடக்குப் பிரதேசசபையுடன் விவசாய அமைச்சின் சுற்றாடல் பிரிவு இணைந்து சூழலை அழகுபடுத்தும் நோக்கில் காங்கேசன்துறைக் கடற்கரையை அண்மித்த பகுதியில் வீதியோரமாக நேற்றுச் செவ்வாய்க்கிழமை நிழல்தரு மரங்கள் நடப்பட்டன.

நிகழ்வில் வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன், வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் செயலாளர் சிவகுமாரன் சிவானந்தன், காங்கேசன்துறை உப அலுவலக பொறுப்பதிகாரி மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு மரங்களை நடுகை செய்தனர். (ச-66)



அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலையின் மைதானத்தில் நடைபெற்றன.

பாடசாலையின் அதிபர் பொ.சிவரஞ்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உடற்கல்விப் பணிப்பாளர் மா. இளம்பிறையன் கலந்து சிறப்பித்தார். (ச-555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறி ஆசிரியர்களுக்கு புதிய பாடத்திட்டக் கருத்தரங்கு



இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்டங்கள் தொடர்பான கருத்தரங்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலகக் கேட்போர் கூட மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அனிருந்தனன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் பிரதம அதிதியாக யாழ். மாவட்டச் செயலர் ம. பிரதீபன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலக மேலதிக செயளாலர் க. சிவகரன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர். வளவாளர்களாக அபிவிருத்தி உத்தியோகதர் கு. ஜெயராஜி மற்றும் சைவப் புலவர் யோ. கஜேந்திரா ஆகியோர் பங்கேற்றனர். (ச)


## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 28 . 11 . 1951

ஆண்டவன் அடியில் 07 . 03 . 2026



### திருமதி கணேசலிங்கம் வரதலட்சுமி

யாழ். புங்குடுதீவை பிறப்பிடமாகவும் பிரான்ஸ்சை வதிப்பிடமாகவும் கொண்ட திருமதி. கணேசலிங்கம் வரதலட்சுமி அவர்கள் கடந்த 07.03.2026 சனிக்கிழமை அன்று பிரான்ஸில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா – அருளம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கணேசலிங்கம் (குப்பிளான்) அவர்களின் அன்பு மனைவியும், தர்மசீலன் (கணக்காளர்), வசந்தினி (சுவீடன்), தவசீலன் (அதிபர் - யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), சுகந்தினி (முன்னாள் ஆசிரியை- வவு/தமிழ் மத்திய மகா வித்தியாலயம் /பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு தாயாரும், நித்திலா (ஆசிரியர்), ராதாகிருஸ்ணன் (சுவீடன்), ஜெயந்தினி (ஆசிரியர்), மோகனதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அமரர் மனோன்மணி, பாலசுப்பிரமணியம் (கனடா), இரத்தினம் (மன்னார்), விக்னேஸ்வரன் (கனடா), காலஞ்சென்ற சரோஜா, மாலினி (ஓய்வுபெற்ற ஆசிரியர்- இலங்கை), காலஞ்சென்ற கண்ணதாசன், சுந்தரமூர்த்தி (ஆசிரியர்-இலங்கை), திருநாவுக்கரசு (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு சகோதரியும், அக்ஷயன், கவிஷன், நிவேதன், தணிகா, அபிநயா (மருத்துவ பீடம் - மூன்றாம் வருடம்), மோஷிகா, கணிகன், சுமிதா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (12.03.2026) வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 31430)A



## இதய அஞ்சலி



தோற்றம் 13.12.1960 மறைவு 03.03.2026

### திருமதி சுவேந்திராதேவி செல்வராசா (ரஞ்சி)

(நந்தாவில், கொக்குவில் கிழக்கு)

எமது வளர்மதியின் மூத்த கழக உறுப்பினராகிய
**செல்லத்துரை செல்வராசா (நாதன்)**
அவர்களது துணைவியும்
உறுப்பினர்களாகிய
**செ.கபிலன் (டுபாய்), சு.மயூரிகா (UK)**
ஆகியோரின் அன்புத் தாயாருமாகிய
**சுவேந்திராதேவி செல்வராசா அவர்கள்**
இறைபதம் அடைந்து விட்டார். வளர்மதியின்
வளர்ச்சிக்காக இவர்கள் குடும்பமாக அளப்பெரிய
சேவையாற்றியவர்கள்.
அன்னாரிற்கு எமது இறுதி இதய
அஞ்சலியினைத் தெரிவித்துக்கொள்வதுடன்
அமரரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும்**
**சனசமூக நிலையமும்**
**வளர்மதி நிறைவாழ்வகம்**
**வளர்மதி மகளிர் அமைப்பு**

(CS/60958) J-1



## 17ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15 . 03 . 1939

மறைவு 11 . 03 . 2009

அமரர்
### உயர்திரு. வயிரமுத்து குலசிங்கம்

**(ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் நாயகம், இலங்கை)**

எங்கள் அன்புத் தெய்வமே
மண்ணில் தோன்றிய நாள் முதல்
மாண்புறு வாழ்க்கை வாழ்ந்து
எம்மை எல்லாம் வாழவைத்த உத்தமரே!
நீங்கள் எங்குதான் ஓடி மறைந்தீர்களோ?
நாமும் மண்ணில் மறையும் மட்டும்
உங்கள் அன்பான பண்பான உள்ளத்தை
மறக்க முடியாமல் வாடித் தவிக்கின்றோம் ஐயா.

***உங்கள் பிரிவால் ஏங்கி நிற்கும்***
**மனைவி, மருமக்கள்,**
**பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**மைத்துனமார்.**

**Mrs.S.Kulasingam**
**London.**
**11.03.2026**



## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 04 . 1930

மறைவு 07 . 03 . 2026



### குமரையா சிவசுப்பிரமணியம்

**(கோயிலாக்கண்டி அம்பலத்தார் அடி ஸ்ரீ உக்கிர வைரவர் ஆலய தர்மகர்த்தா)**

கோயிலாக்கண்டி கைதடியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட குமரையா சிவசுப்பிரமணியம் அவர்கள் கடந்த (07.03.2026) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் எதிர்வரும் (15.03.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் (கோவிலாக்கண்டி கைதடி) அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக காந்தாளம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 473 8119, 077 454 2750**
**074 300 1721**

(CR/47206) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை
என்பது பேசும்
ஓவியம்.
-எமெர்சன்

# புதன் பொய்கை

11.03.2026
புதன்கிழமை

# ஈரான் போர்: வெற்றி யாருக்கு?



அபிகரன்

மத்திய கிழக்கின் வானம் கடந்த சில நாள்களாகவே நெருப்பைக் கக்கிக் கொண்டிருக்கிறது. அமெரிக்காவின் அதிநவீன எப்-35 போர்விமானங்கள் ஈரானின் வான்பரப்பைச் சிதைத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், வெள்ளை மாளிகையின் இரகசிய அறையில் அமர்ந்திருக்கும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் நெற்றியில் அரும்பியிருக்கும் வேர்வை, போர்க்களத்தின் உஷ்ணத்தை விடப் பயங்கரமானது. போர் ஒரு வாரத்தையும் தாண்டியிருக்கும் நிலையில், 'வெற்றி' என்ற வார்த்தை அமெரிக்காவுக்கு எட்டாக்கனியாகவே இருக்கிறது. ஈரானை வீழ்த்தப் புறப்பட்ட வல்லரசு, இப்போது தான் தோண்டிய புதைகுழியிலேயே சிக்கித் தவிக்கிறது.

ட்ரம்பின் முன்னால் இப்போது மூன்று ஆபத்தான தெரிவுகள் மட்டுமே மிச்சமிருக்கின்றன. ஆனால், அந்த மூன்றுமே அமெரிக்காவின் உலகளாவிய ஆதிக்கத்திற்கு 'செக்' வைக்கும் நகர்வுகள். முதல் தெரிவு, "நாங்கள் நினைத்ததைச் சாதித்துவிட்டோம்" என்று ஒரு வெற்றிக் கோஷத்தைப் போட்டுவிட்டு பின்வாங்குவது. இது பார்ப்பதற்கு கௌரவமாகத் தெரிந்தாலும், நடைமுறையில் இது அமெரிக்காவின் மரண சாசனம். ஈரான் ஒரு பீனிக்ஸ் பறவையாக மீண்டும் விஸ்வரூபம் எடுக்கும்; இஸ்ரேலின் பாதுகாப்பு கேள்விக்குறியாகும்; எல்லாவற்றிற்கும் மேலாக, அமெரிக்கா ஒரு 'பலவீனமான புலி' என்ற முத்திரை குத்தப்பட்டு, மத்திய கிழக்கை விட்டு நிரந்தரமாக வெளியேற வேண்டியிருக்கும். இது ட்ரம்பின் அரசியல் வாழ்க்கையை மற்றொரு 'ஆப்கானிஸ்தான் தோல்வியாக' வரலாற்றில் பதிவு செய்யும்.

இரண்டாவது தெரிவு, தரைவழித் தாக்குதல். இது தற்கொலைக்குச் சமமான ஒரு முடிவு. ஈரான் என்பது வெறும் நிலப்பரப்பல்ல; அது 90 மில்லியன் மக்களையும், அலாஸ்கா மாகாணத்தின் பரப்பளவையும் கொண்ட ஒரு மலைப்பாங்கான கோட்டை. இருபது ஆண்டுகள் போராடியும் ஆப்கானிஸ்தானில் தாலிபான்களை வீழ்த்தமுடியாத நேட்டோப் படைகளுக்கு, ஈரானின் நிலப்பரப்பு ஒரு நரகமாக மாறும். முக்கியமாக, ஈரானின் நவீன 'ட்ரோன்' (Drone) தொழில்நுட்பம் மற்றும் தற்போதைய இளம் கொமாண்டர்களின் போர் வியூகங்கள் அமெரிக்க இராணுவத்தை நிலைகுலையச் செய்துள்ளன. உள்ளே நுழையத் தெரிந்த அமெரிக்காவிற்கு, அங்கிருந்து வெளியேற எந்தவொரு வெளியேறுகைத் திட்டமும் கைவசம் இல்லை.

மூன்றாவது மற்றும் மிக மோசமான தெரிவு, அணு ஆயுதப்பிரயோகம். இது நாகரிகத்தின் முடிவாகவே இருக்கலாம். ஈரான் மீது அணுகுண்டு விழுந்தால், அடுத்த நிமிடம் ரஷ்யாவும் சீனாவும் நேரடியாகப் போரில் குதிக்கும். ஈரானின் அண்டை நாடான பாகிஸ்தான் சும்மா இருக்காது. அணுக்கதிர் வீச்சு ஈரானை மட்டும் அழிக்காது, ஒட்டுமொத்த பிராந்தியத்தையும், இஸ்ரேலையும் சேர்த்து விஷமாக்கும். "இதற்கு நீங்கள் தயாராக இல்லை" என்று சீனா சொன்ன அந்த ஒற்றை வரி, ட்ரம்பிற்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை மட்டுமல்ல, உலகிற்கான அபாய அறிவிப்பு.

கடந்த சில நாள்களில் ஈரானின் ஏவுகணைத் தாக்குதல்கள் குறைந்திருக்கலாம், ஆனால் அவர்களின் ட்ரோன்கள் இன்னும் வானில் வட்டமடித்துக் கொண்டே இருக்கின்றன. ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேல் வீரரைச் சிறைபிடித்ததும், சவுதியின் எண்ணெய் வயல்கள் தகிப்பதும் அமெரிக்காவின் தடுப்பு அரண்களைச் சிதைத்துவிட்டன. ட்ரம்ப் இப்போது பின்வாங்குவதற்கும், புதைகுழிக்கும், உலக அழிவுக்கும் நடுவில் சிக்கிக்கொண்டிருக்கிறார். அவரிடம் இருக்கும் தெரிவுகள் 'மோசம்', 'மிக மோசம்' மற்றும் 'நினைத்துப் பார்க்கமுடியாதவை' மட்டுமே! உலகம் ஒரு மிகப்பெரிய மாற்றத்தைச் சந்திக்கப் போகிறது, அதற்கு நாம் தயாராக இருக்கவேண்டும்.



ஈரான் மீது அணுகுண்டு விழுந்தால், அடுத்த நிமிடம் ரஷ்யாவும் சீனாவும் நேரடியாகப் போரில் குதிக்கும். ஈரானின் அண்டை நாடான பாகிஸ்தான் சும்மா இருக்காது. அணுக்கதிர் வீச்சு ஈரானை மட்டும் அழிக்காது, ஒட்டுமொத்த பிராந்தியத்தையும், இஸ்ரேலையும் சேர்த்து விஷமாக்கும். "இதற்கு நீங்கள் தயாராக இல்லை" என்று சீனா சொன்ன அந்த ஒற்றை வரி, ட்ரம்பிற்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை மட்டுமல்ல, உலகிற்கான அபாய அறிவிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



○ பவித் அருள்வசந்

# காலத்தின் தேவை நீங்களும் உங்கள் பணிகளுமே!

வடக்கு மாகாணத்தின் பெருமை கூறும் அம்சங்களில் ஒன்றாகக் காணப்படும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஒவ்வொரு ஆண்டும் 2500 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகளை உருவாக்கி அவர்களின் அடுத்த படி நோக்கி நகரச்செய்கிறது. எத்தனை பட்டதாரிகள் அடுத்த படி நோக்கி நகர்கின்றனர், அவர்களது நகர்வு எப்படிப்பட்டது, சமூகத்துக்கு வளம் சேர்ப்பதா?, சமூகத்தை மேம்படுத்துவதா?, குறைந்தபட்சம் அவர்களை வளர்த்தெடுத்த ஊரை வளப்படுத்துவதா? எனப் பல கேள்விகளுக்கான விடைகளைக் காண்பதனூடாக பல்கலைக்கழகங்களில் இருந்து வெளிவரும் பட்டதாரி சமூகத்தின் சிந்தனைகளை மதிப்பிடலாம்.

பல்கலைக்கழகப் பட்டதாரிகள் என்றால் கச்சேரிக்கு முன் பதாகைகள் தாங்கி வேலை கேட்டுப் போராட்டம் செய்பவர்கள் என்றவொரு போர்வையைச் சமூகம் பட்டதாரிகளுக்குப் போர்த்திவிட்டது. வேலை வேண்டி அரசாங்கத்திடம் போராட்டம் செய்வது நியாயமா? அல்லது நியாயமில்லையா? என்ற வாதப்பிரதிவாதங்கள் சமூகத்தினை இன்றுவரை ஆக்கிரமித்துள்ளன. ஆரம்பக் கல்வியிலிருந்து பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு வரை அரசாங்கம் இலவசக் கல்வியை நாட்டுப் பிரஜைகள் அனைவருக்கும் வழங்குகின்றது. குறிப்பாக 18 வயதுக்குக் குறைந்த அனைவரும் கல்வி கற்பது அவசியம் என்று கட்டாயக் கல்வியையும் வழங்கி அதைத் தொடர்ந்து உயர்கல்வியையும் அதனோடு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகும் மாணவர்களுக்கு மேலதிக புலமைப்பரிசில் கொடுப்பனவுகளுடன் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பினையும் வழங்கிவருகிறது.

இவ்வாறு பரந்துபட்ட கல்வியையும், அறிவையும் பெற்ற பட்டதாரிகளால் சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்கிக்கொள்ள முடியாதா..? தனியொரு வேலையைத் தேடிக்கொள்ள முடியாதா..? என்ற கேள்விகளை இந்தக் கட்டுரை வாயிலாகத் தொடுக்க வேண்டிய தேவையுமுள்ளது.
சுய தொழிலை ஊக்குவிப்பதற்காக வட்டி இல்லாக் கடன் திட்டமும் அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும் பட்டதாரிகளில் பலர் மேலதிகக் கல்வி, வேலைவாய்ப்பு, திருமணமுறை மற்றும் சட்டவிரோதக் குடிப்பெயர்வு மூலம் நாட்டை விட்டு வெளியேறுகின்றார்கள். நாட்டினுடைய மக்களின் வரிப்பணத்தில் கல்விகற்று அவ் மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தவேண்டிய புலமைசாலிகளின் நிரந்தர வெளியேற்றமானது இந்நாட்டு மக்களுக்கு இழைக்கும் அநீதியாகாதா? என்ற வினாவினை வாசகர்களின் சிந்தனைக்கு விட்டுவிடுகின்றேன்.

இவ்வாறான விமர்சனங்களை முன்வைப்பதற்கும் இத்தகைய விடயங்கள் நடைபெறுவதற்கான தூண்டல்கள் காரணிகள் சிலவற்றையும் இக்கட்டுரையில் உள்ளடக்குவதற்கு முயற்சித்துள்ளேன். ஒரு நாட்டினுடைய அரசாங்கமானது அந்நாட்டு மக்களை தொழிலுலகத்திற்கு தயார்செய்தல் வேண்டும். ஆனால் இலங்கையின் கல்வித்திட்டமானது தொழில்சார் யுகத்திற்கு தகவுடைய கல்விசார் நபர்களையோ/பட்டதாரிகளையோ உருவாக்குவதற்கான அடித்தளத்தை வழங்கவில்லை.



கடந்தகாலங்களில் இலங்கையின் பொதுச்சேவை நிர்வாகத்தின் போது வழங்கப்பட்ட அரசியல் சார் நியமனங்களும் பட்டதாரி மாணவர்களின் போராட்டங்களுக்குத் தூண்டுகோலாக அமைத்திருக்கலாம். வழங்கப்பட்ட ஏராளமான அரசியல் நியமனங்களால் குறித்த பணிக்கு தகவுடைய ஏராளமான வறிய மற்றும் நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்த பட்டதாரிகள் வேலைகளை இழந்து மிகவும் கடினமான சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டிருந்தார்கள். ஆகவே அரசாங்கத்தின் முறையற்ற பக்கச்சார்பான செயற்பாடுகளும் இத்தகைய சூழ்நிலைக்கு காரணமாக அமைந்துள்ளதைக் குறிப்படுதல் அவசியமாகும்.

மேலும் இலங்கை அரசாங்கத்தினுடைய நீட்சியடைந்த உச்சபட்ச இன அடக்குமுறைக்கு எதிராக தோற்றமடைந்த உள்நாட்டுப்போரில் பாதிக்கப்பட்ட சிறுபான்மை தேசிய இனத்தவர்களில் பலர் அநேகமான ஐரோப்பிய நாடுகளுக்கு குடிபெயரத் தொடங்கியமையும், அதன் நீட்சியாகவும் அதன் மேலுள்ள மோகத்தாலும் உருவாகியுள்ள பணம்சார் வாழ்வியலும் ஏராளமான புலமைசாலிகள் நாட்டிலிருந்து வெளியேறக் காரணமாகியுள்ளன. ஒரு நாட்டில் மக்களின் கருத்துகளைப் பாதுகாப்பாக வெளிப்படுத்துவதற்கான களங்கள் இல்லையெனில் இத்தகைய விளைவுகளைத் தவிர்க்கவும் முடியாது.

மேலும் இலங்கையில் தனியார் துறைக்குள் உட்செல்வதற்கான தொழில்வாய்ப்புகளும், சுயதொழிலை மேம்படுத்துவதற்கான சந்தைவாய்ப்புக்களும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. குறிப்பாக விவசாய வேளாண்மை பொருளாதாரத்தை ஊக்குவிக்க வேண்டிய எங்களுடைய பொருளாதாரக் கட்டமைப்பு முறை அதனை முகாமைத்துவம் செய்வதிலும் விலைநிர்ணயம் செய்வதிலும் சந்தைக்கு கொள்முதல் செய்வதிலுமுள்ள பலவீனமான அணுகுமுறையும் சுய வேலைவாய்ப்புக்கான தேடல்களைத் தவிர்க்கின்றன.

இத்தகைய காரணிகள் காணப்பட்டாலும் மக்களின் வரிப்பணத்தில் கல்விகற்று முறையாக மக்களுக்காகவோ, தமது நாட்டிற்காகவோ, தமது சமூகத்திற்காகவோ, செயற்படாமல் நிரந்தரமாக வெளிநாடுகளுக்குச் செல்ல முயலும் பட்டதாரிகள் தங்களை மீண்டும் ஒருமுறை மீள்பரிசீலனை செய்து கொள்ளுதல் வேண்டும். குறிப்பாக சுயநிர்ணயம் வேண்டிப் போராடும் தேசிய இனமாகிய எங்களுக்கு உங்களுடைய வெளியேற்றம் பாரிய பின்னடைவைத் தரக்கூடியது. ஒவ்வொரு மாணவர்களுக்கும் சமூகம் தொடர்பான சிந்தனையும் மக்களின் வளர்ச்சி தொடர்பான அக்கறையும் இருக்கவேண்டும். ஆகவே பட்டப்படிப்பை பூர்த்திசெய்யும் பட்டதாரிகள் சரியான விதத்தில் தமது அடுத்த படி நோக்கி நகரவேண்டும். மக்கள் பிரதிநிதிகளும் அரசாங்கமும் அதற்கான முன்னகர்வுகளை மேற்கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் இந்து சமூக சமயப்பணி

**கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்**
செம்பருத்தி இல்லம்
இராஜேஸ்வரி அன்புச்சேவை
அச்செழு நீர்வேலி
புன்னாலைக்கட்டுவன் தெற்கு
யாழ்ப்பாணம்



சைவமும் தமிழும் தழைத்தோங்கத் தம்மையே முற்றுமுழுதாக அர்ப் பணித்துப் பாடுபட்ட ஓர் உயர்ந்த புண்ணிய சீலர் ஸ்ரீலஸ்ரீ ஆறு முகநாவலர். இன்று நாங்கள் ஒவ்வொரு வரும் சைவர்கள் என்று சொல்லிக் கொண்டுதலைநிமிர்ந்து வாழ்கின்றோம் என்றால் அதற்கு மூலகாரணர் ஆறு முகநாவலரே ஆவார். நெற்றியில் திருநீறு துலங்க சைவசமயிகள் என்ற நல்லுணர்வோடு நாம் வாழ்வதற்கு வித்திட்ட நாவலரின் பெருமை சொல்லில் அடங் காது. 19ஆம் நூற்றாண்டில் யாழ்ப் பாணத்து நல்லூரிலே தோன்றி (1822-1879) இந்து சமூக சமயப்பணிகள் பலவாற்றிய ஓர் அவதார புருஷர் ஆறுமு கநாவலர். தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் நன்கு தேர்ச்சிபெற்ற இவர் யாழ். மத்திய கல்லூரியில் கல்வி கற்றும் கற்பித்தும் வந்ததோடு அதிபர் பேர்சி வல் பாதிரியாரின் நன்மதிப்பைப் பெற்று தமிழ்ப் பண்டிதராகி கிறிஸ்தவ நூலான விவிலிய நூலை (பைபிளை) மொழிபெயர்த்தவர்.

இவர் சைவத்தையும் தமிழையும் தமது இருகண்களாகப் போற்றி வளர்த்தவர். 'இந்து' என்று சொல்லி நாம் அனைவரும் இன்பமாக வாழ வழிசமைத்துக் கொடுத்த இவர் எமது நாட்டில் சைவ ஆகமத்துக்கு விரோதமான நடவடிக்கைகளை வளரவிடாமல் முற்றுமுழுதாகக் களையவேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். இந்துக்கள் வீணான செயல்களில் ஈடுபடுவதை இவர் அடியோடு வெறுத்தார். உண்மையான சைவ வாழ்வை விரும்பினார். அதற்காக உண்மையாக உழைத்தார். கோயிலிலே கிரியைகள் ஆகம விதிகளுக்கமையாமை, திருமுறைகள் பண்ணோடு பாடப்படாமை, கோயில் நிர்வாகத்தினரின் ஒழுக்கக்கேடு, சைவக்குருமார்களின் அசமந்தப் போக்கு, கோயில் திருவிழாக்களில் சதுர்க்கச்சேரி (சின்னமேளம்) நடத்துதல், வானவேடிக்கை, கணக்குச்சீரின்மை, இரவு முழுக்க விடியும் வரைக்கும் நிகழ்ச்சிகள் நடத்துதல், பொய்கூறுதல், களவெடுத்தல், மதுவருந்துதல், சூதாடுதல், தாம்பூலம் போடுதல் முதலானவற்றை இவர் வன்மை யாகக் கண்டித்தார். எல்லாவற்றுக்கும் மேலாக ஆலயங்களில் உயிரினங்களைப் பலியிடுதல் இவருக்குப் பிடிக்காத ஒன்றாக இருந்தது.

நாவலருடைய சமூகப்பணியில் மிகவும் பிரதானமாகக் கருதப்படவேண்டியது கஞ்சித் தொட்டித்தரும மாகும். 1876இல் கடும் வறட்சி வந்தது. இதைக் கண்ட நாவலர் பட்டினியால் வாடிய மக்களுக்கு கஞ்சிவார்க்க முற்பட்டார். இதனால் அவர் பெரிய ஒரு சாதனையைப் படைத்தார். பசிப்பிணி நீங் கிய மக்கள் இவரை மனமார வாழ்த்தினர். அடுத்து இவரது விடாமுயற்சியால் நெற்பயிர்ச்செய்கை வளர்ந்தோங்கியது. சும்மாகிடந்த வயல் நிலங்களில் பயிர் வளர்த்து நெல்விளைய வழிவகுத்தார். 'புராதன குளங்களையும் நீர்த்தேக்கங்களையும் அரசாங்கம் சீர்திருத்தவேண்டும். இல்லையேல் இலங்கையின் எதிர்காலம் சுபீட்சமாக அமையாது' என்று பத்திரிகையில் எழுதினார். இது ஒருபுற மிருக்க, ஈழநாட்டிலே இந்துப் பாரம்பரியம் மிகவும் கரிசனையோடு பேணப்படவேண்டும் என்பதை வலியுறுத்தினார். இதற்காக சட்ட நிருபண சபையிலே சைவமரபுபேணும் ஒருவர் அங்கம் வகிக்க வேண்டும் என்று சேர்.பொன்னம்பலம் இராமநாதனை நியமனம் செய்ய முயன்று வெற்றியும் கண்டார். நாவலர் எடுத்த பெருமுயற்சியால் இராமநாதன் இந்துப் பாரம்பரியங்களையும் சம் பிரதாயங்களையும் சட்ட நிருபண சபையிலே எடுத்துரைத்தார். அதன் காரணமாக சேர்.பொன் இராமநாதன் நாவலரை 'இந்துக்களின் சீர்திருத்தவாதி' என்று குறிப்பிட்டார்.

இது எல்லாவற்றுக்கும் மேலாக யாழ்ப்பாணத்தில் சைவமும் தமிழும் நன்கு வேரூன்றித் தழைத் தோங்க தன்னுடைய உடல், பொருள், ஆவி என்று அத்தனையும் அர்ப்பணம் செய்து வாழ்ந்து காட்டியவர் நாவலர் என்று கூறினால் அது மிகையாகாது. இந்த மனிதப்பிறவி எமக்குக் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டாகும். இம்மனிதப்பிறவி ஒரு புனிதப் பிறவியாகும். இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ சொல்லமுடியாது. இப்பூவுலகில் எமது இறப்பு என்ற ஒன்றை மாத்திரம் எம்மால் எப்போது என்று வரையறுத்துக்கூறமுடியாது. அது ஒரு புறமிருக்க யாழ்ப்பாணத்துப் பட்டினத்திலே இன்று நாம் தலைநிமிர்ந்து ஒரு சைவசமயிகளாக வாழ்கிறோம் என்றால் அதற்கு வித்திட்டவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானேயாவார். இன்று நாம் நெற்றியில் நீறு துலங்க விபூதி பளிச்சிட உண்மைச் சைவசமயிகளாக வாழ்வதற்கு வழி வகுத்துத் தந்தவர் நாவலரேயாவார். அவருடைய அறப்பணிக்கு ஈடு இணை கிடையாது. சைவ சமயம் மேலோங்கி வளர்வதற்கு தம்முடைய வாழ்நாளையே அர்ப்பணம் செய்து உண்மை பேசி உத்தமராய் வாழ்ந்து காட்டிய நாவலரை நாம் மறக்கக்கூடாது. அவருடைய சமயப்பணிகளை நினைவுகூர்ந்து அறவாழ்க்கை வாழ உதவிகள் செய்த அவரை நாம் நெஞ்சில் நிலைநிறுத்தி வாழத் தலைப்படுவோம்.


## துரோகமில்லா தேசம்!


பாதை எங்கும்
கண்ணிவெடிகள்,
நாம் நடக்கும் இடமெல்லாம்
மௌனமாகப் புதைந்திருக்கின்றன.
நிற்கமுடியாது,
திரும்பவும் முடியாது -
நடக்கவேண்டும்
காயங்களோடு.
வெடிக்கின்றன
துரோகங்கள்,
உடல் சிதறும்,
ஆனால்
வலி...
அது
இப்போது வலிக்கவில்லை.
சுமந்து செல்கிறேன்
என் உடலை
ஒரு சுமையாக.
வலிக்குப் பழகிய
இந்த வாழ்க்கையில்
நினைவுகள் மட்டும்
இன்னும் கூர்மையானவை.
அவை மரத்துப்போனால்
எவ்வளவு நல்லது.
நினைவுகள் இல்லாத
ஒரு வாழ்வு -
அதுதான்
துரோகமில்லா தேசம்.
அங்கே
சிட்டுக்குருவி போல
சுமை இல்லாமல்
சிறகசைக்கும் காலம்.

● புதியமாதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■ ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

# பிள்ளைக்கறியும்,பெருந்திணையும் எப்ஸ்டீன் ஆவணங்கள்

நான் பத்தாம் வகுப்பு படிக்கும் பொழுது எங்களுக்கு சங்க இலக்கியத்தில் வரும் திணைகள் பற்றிய பாடம் இருந்தது. எங்கள் தமிழாசிரியர் எல்லாத்திணைகள் பற்றியும் விளக்கிய பிறகு இரண்டு திணைகள் பற்றி எதுவும் சொல்லாமல் விட்டுவிட்டார். நாங்கள் ஏன் என்று கேட்டதற்கு “உங்களுக்குச் சொன்னால் புரியாது. உங்களுக்கே வளர்ந்த பிறகு தெரிந்துவிடும்” என்று சொன்னார். அந்தக் காலத்தில் இணையமோ அல்லது இப்பொழுது இருப்பது போல சமூக ஊடகங்களோ கிடையாது. ஆதலால் நாங்கள் அந்த இரண்டு திணைகளைப் பற்றி கோனார் உரையில் என்ன எழுதியிருந்தார்களோ அதையே நெட்டுரு செய்து தேர்வு எழுதினோம். அந்த இரண்டு திணைகள் என்ன தெரியுமா ? பெருந்திணை, கைக்கிளை. கைக்கிளை திணையைப் பற்றி வேறு ஒரு நேரத்தில் பேசலாம். இப்பொழுது உலகையே அதிர்ச்சியுள்ளாக்கியிருக்கும் பெருந்திணையா JEFFERY EPSTEINன் ஆவணங்களைப் பற்றிப் பேசலாம்.

எப்ஸ்டீன் தனது 21ஆம் வயதில் எந்தப் பட்டமும் பெறாமலேயே கணிதம் மற்றும் இயற்பியல் ஆசிரியராக தனது வாழ்க்கையைத் தொடங்கினார். பிறகு 1976 ஆம் ஆண்டு பள்ளியிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்ட பிறகு, வங்கி மற்றும் நிதித்துறையில் நுழைந்து, தொழில் நுணுக்கங்களைக் கற்றுக்கொண்ட பிறகு சொந்தமாக தனது நிறுவனத்தைத் தொடங்கினார். பில்லியனர்களுக்கு வரி மற்றும் நிலம் வாங்கி விற்பது தொடர்பான சேவைகளை வழங்குவதன் மூலம் பெரும் பணம் சம்பாதித்தார். பெரும் பணம் ஈட்டிய பிறகு அரசியல் வாதிகள், உயரதிகாரிகள் மற்றும் பெரும்பணக் காரர்களின் நட்பினை ஏற்படுத்திக் கொண்டதன் மூலம் பெரும் செல்வாக்கு எல்லாத்தரப்பிலும் அவனுக்கு கிடைத்தது. மித மிஞ்சிய பணம், அளவு கடந்த அதிகாரச் செல்வாக்கு இருக்கும் தைரியத்தில் பல வயது குறைந்த பெண்களைக் கடத்திக்கொண்டுவந்து பாலியல் பலாத்காரம் செய்வது மற்றும் கொலை என்று அவன் மீது ஏகப்பட்ட குற்றச்சாட்டுகள் எழுந்தன. 14 வயது பெண்ணைப் பலாத்காரம் செய்த குற்றத்துக்காக 2005ஆம் ஆண்டு வழக்குத் தொடரப்பட்டு பிறகு 2006ஆம் ஆண்டு நடந்த விசாரணையில் 18 மாதம் சிறைத்தண்டனை எப்ஸ்டீனுக்குக் கிடைத்தது. ஆனால் வழக்கு நடந்து கொண்டிருக்கும் நேரத்தில், ஒரு சர்ச்சைக்குரிய ஒப்பந்தம் நீதிமன்றத்தால் செய்யப்படுகிறது. அதாவது எப்ஸ்டீன் ஆயுள் தண்டனையை எதிர்கொள்ள நேரிடும் ( 18 வயதுக்கு கீழான பெண்களைப் பலாத்காரம் மற்றும் விபசாரத்துக்கு உட்படுத்துதல் ) குற்றங்களிலிருந்து விடுவிக்கப்பட்டான். நன்னடத்தை(?) காரணமாக 13 மாதங்களில் சிறைத்தண்டனையிலிருந்தும் விடுவிக்கப்பட்டான். 2009-2018 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் தொடர்ந்து பல நூறு பெண்கள் எப்ஸ்டீன் மேல் பாலியல் பலாத்கார குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். 2000களின் முற்பகுதியில் இருந்த பாலியல் கடத்தல் குற்றச்சாட்டில் எப்ஸ்டீன் நியூயோர்க்கில் 2019ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டான். பதின்பருவ சிறுமிகளுக்கு 'மசாஜ்' செய்வதற்காக பணம் கொடுத்து, புளோரிடா மற்றும் நியூயோர்க்கில் உள்ள தனது வீடுகளில் அவர்களை பாலியல் வன்கொடுமை செய்தது போன்ற பல குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவருக்கு பிணை மறுக்கப்பட்டது. பிறகு ஓகஸ்ட் 2019 ஆம் ஆண்டு மர்மமான முறையில் நியூயோர்க் சிறையில் இறந்து போனார். தற்கொலை செய்து இறந்து கொண்டாரென பொலிஸ் இந்த வழக்கினை முடித்துக்கொள்கிறது

> ஏறிய மடல் திறம் இளமை தீர் திறம்
> தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
> மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
> செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே.
>
> தொல்காப்பியம்

அமெரிக்க நீதித்துறை வசம் உள்ள எப்ஸ்டீன் தொடர்பான 6 மில்லியன் ஆவணங்களில் இதுவரை 3.5 மில்லியன் ஆவணங்கள் மட்டுமே பொதுமக்களுக்கு வெளியிடப்பட்டுள்ளன . இந்த ஆவணங்களின் மூலம் யாரெல்லாம் எப்ஸ்டீனுடன் பழகியிருந்தனர். குறிப்பாக அவரின் தனித்தீவில் காமக்களியாட்ட விளையாட்டுகளுக்கு அவரது லோலிட்டா எக்ஸ்பிரஸ் எனப்படும் விமானத்தில் பயணித்தனர் போன்ற எல்லா விபரங்களும் நமக்குக் கிடைக்கின்றன . அதாவது 2008ஆம் ஆண்டு பதின்பருவக் குழந்தைகளுடன் பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுகளில் அவர் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்ட பிறகும், எப்படி இந்த உயர்தர வர்க்கத்தினர் எப்ஸ்டீனுடன் நெருக்கமான நட்பு உறவுகளைப் பேணி வந்திருக்கின்றனர். அதுமட்டுமல்ல தங்களது பாலியல் இச்சை மற்றும் காதல் ஆலோசனைக்காக இந்த அதிகாரவர்க்கத்தினர் எப்ஸ்டீனை அணுகியிருக்கின்றனர் என்பதைப் படிக்கும் போது ஆத்திரம் வருகிறது.



எப்ஸ்டீன் கோப்புகளின் மூலம் நாம் தெரிந்துகொள்ளவேண்டியது என்னவெனில் அவரது நட்பு வலை ஊடகங்கள், அரசியல், தொழில்நுட்பம், கல்வித் துறை, நிதி மற்றும் ஹாலிவுட் என்று எல்லா உலகம் முழுவதும் பரவியுள்ளது என்பதையே. இந்தக் கோப்புகளின் மூலம் மாட்டிக்கொண்ட எல்லாப் பிரபலங்களும் எப்ஸ்டீனுடன் தங்கள் உறவு எப்படி இருந்தது என்பதை மறுபடியும் விளக்கவேண்டிய கட்டாயத்திற்குள்ளாகியிருக்கின்றனர். அவர்கள் ஏன் அந்த மின்னஞ்சலை அவருக்கு அனுப்பினார்கள், அல்லது அந்த நேரத்தில் அந்த இடத்தில் அந்தப் புகைப் படத்தில் அவர்கள் என்ன செய்தார்கள் என்பதை விளக்கவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். நோர்வே, ஸ்லோவாக்கியா, பிரான்ஸ், இங்கிலாந்து மற்றும் வால் ஸ்ட்ரீட்டில் என்று எத்தனையோ உயர் பதவிகளில் உள்ளவர்கள் தங்களது பதவிகளை இதுவரை துறந்துள்ளனர். இதுவரை வெளிவந்த கோப்புகளின் மூலம் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன், பிரிட்டனின் இளவரசர் ஆண்ட்ரூ, புரூஸ் வில்லிஸ், கேமரூன் டயஸ், கேட் பிளான்செட், கெவின் ஸ்பேசி, நவோமி கேம்பல் மற்றும் லியோனார்டோ டிகாப்ரியோ ,பில் கேட்ஸ், எலான் மஸ்க், மிக் ஜாகர், வூடி ஆலன், ரிச்சர்ட் பிரான்சன் மற்றும் பிரபல மருத்துவர் மெஹ்மெட் ஓஸ் ஆகியோர் எப்ஸ்டீனுடன் தொடர்பில் இருந்திருக்கின்றனர்.

இன்னும் 3.5 மில்லியன் கோப்புகள் வெளியே வரவில்லை. ஆனால் இந்தக் கோப்புகள் எந்தவிதமான இருட்டடிப்பும் செய்யாமல் வெளியிடப்படுமா என்பது சந்தேகமே. ஏனென்றால் இப்பொழுது அமெரிக்க அதிபராக இருக்கும் டிரம்ப் எப்ஸ்டீனின் முன்னாள் நெருங்கிய நண்பர். ஆதலால் அவர் சார்ந்த கோப்புகள் உண்மையாக வெளியேவர வாய்ப்பே இல்லை.

கமல்ஹாசன் நடித்த மிகச்சிறந்த திரைப்படமான மகாநதி படத்தில் தனது குழந்தையை நாசமாக்கிய வெங்கடாசலம் எனும் முதலாளியைக் கொல்லப் போகும் போது அவன், “எனக்கு இதெல்லாம் தெரியாது, தனுஷ் தான் எனக்கு SUPPLY செய்தான்” என்பான். அதற்கு கமல், “தனுஷ் கசாப்புக் கடைக்காரன். நீ தான் பிள்ளைக்கறி வேணுமென்று கேட்டவன்” என்று சொல்வார். இங்கே தனுஷ் எனும் எப்ஸ்டீன் இறந்துபோய்விட்டான். அவனிடம் பிள்ளைக்கறி வாங்கிய அனைத்து அதிகார சக்திவாய்ந்தவர்களும் இன்னும் நல்லவன் என்ற போர்வையில் அலையும்வரை பாதிக்கப்பட்ட ஆயிரமாயிரம் பெண்களுக்கு நீதி கிடைக்கப் போவதில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மாமனிதர் சிவநேசனின் 18ஆவது நினைவேந்தல்

யாழ்ப்பாணம்,மார்ச் 11

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மாமனிதர் கிட்டினன் சிவநேசனின் 18 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு, கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் சிவநேசனின் உருவப்படத்துக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு, ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தி, மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நினைவுரைகள் இடம்பெற்றன.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், சிவநேசனின் உறவினர் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-66)

**பணியாளர்கள் தேவை**

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் நிறுவனத்திற்கு ஆண் / பெண் பணியாளர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:- 076 919 3800

## மரண அறிவித்தல்



பிறப்பு 01 . 10 . 1962

இறப்பு 09 . 03 . 2026

**திருமதி எட்வேட் உதயகுமாரி**

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அமரர் எட்வேட் உதயகுமாரி கடந்த 09.03.2026 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை நல்லம்மாளின் அன்பு மகளும், காலஞ்சென்ற எட்வேட்டின் அன்பு மனைவியும், உஷா, நிஷா, நிஷான் (கொலண்ட்) ஆகியோரின் பாசமிகு தாயும், செபமாலை, காலஞ்சென்ற யக்ரஸ்சின் பாசமிகு மருமகளும், மற்றும் ஞானசெல்வம், சுபாஸ்சந்திரபோஸ் (ஜேர்மனி), பத்மாவதி, யூபேட்ராஜா மற்றும் காலஞ்சென்ற எபிரோன் (மாம்பழம்) ஆகியோரின் சகோதரியும், சூரியாவின் உடன் பிறவா சகோதரியும், தங்கப்பவளம், விஜயமாலா, கோகிலவதனி, ஜெயக்குமார் மற்றும் காலஞ்சென்ற அன்ரன் ஆகியோரின் மைத்துனியும், நேசன், காலஞ்சென்ற சுரேஸ்குமாரின் பாசமிகு மாமியாரும், தினுஸ்ரிகன், நவுயா, அக்சயா, கிசோனி, அஸ்றிகாவின் அன்பு பேர்த்தியும், சுபாசினி, சுஜீபா, றெகானா, றெனேக்கா, லம்ஷா, பைந்தன், விவித்தன், சிமிக்கா, நேகா ஆகியோரின் மாமியாரும், பிரசாத், மரியா, கிருசாந், கிருசாந்தி, டிஷாந்தி ஆகியோரின் பெரியம்மாவும், தரிசினி, றாஜினி, றொனுசன், நியூட்டன் ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்க ஆராதனை புனித மைக்கல் ஆலயத்தில் இன்று (11.03.2026) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்பட்டு புனித மைக்கல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
நிஷா - T.P - 0760221987

CS(24422) A



**மானிப்பாய்**
**மருதடி விநாயகர் ஆலய**
**உற்சவகால தற்காலிக கடைகள் ஏலம்**

எதிர்வரும் 22.03.2026 ஆரம்பமாகவுள்ள மகோற்சவத்தை முன்னிட்டு தற்காலிக கடைகள் அமைப்பதற்கான ஏலம் கூறல் 15.03.2026 (ஞாயிற்றுக் கிழமை) காலை 10.00 மணிக்கு ஆலய முன்றலில் இடம்பெறும்.

செயலாளர்
021 225 5117 தர்மகர்த்தா சபை

## St. Patrick's College, Jaffna

புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்

புதிய அனுமதி - 2027

2027 ஆம் ஆண்டு தரம் 1 இற்கான புதிய அனுமதி விண்ணப்பப் படிவங்களை கல்லூரி நாட்களில் காலை 8.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணிவரை பிரதான அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

- தரம் 1 இற்கு அனுமதி கோரும் மாணவர்கள் 01.02.2021 - 31.01.2022 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பிறந்திருக்க வேண்டும்.
- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை பிறப்புச் சான்றுப் பத்திரத்துடன் நேரில் வந்து பிரதான அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.
- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசி நாள் 24.04.2026.
- தரம் 1 இற்கான அனுமதி நேர்காணல் 18.07.2026 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

அதிபர்

(CS/60954) J-1

## Selection of Rent-a-car Service Provider for the Project for Research and Education Capacity Improvement in Dry Zone Agriculture at University of Jaffna (PRECIDA-UOJ)

PRECIDA-UOJ under technical cooperation by Japan International Cooperation Agency (JICA) is seeking for a rent-a-car service provider for the project that can provide vehicles with drivers for long-term till the end of March 2027.

The eligibility of the applicants is:

- Able to provide at least 2 vehicles (Sedan and/or SUV) with drivers on a daily basis (1 for 3 months and another 1 for 1 year)
- Experience of providing the vehicles to governmental organizations and international agencies on a long-term basis continuously for more than 6 months in the last 3 years.
- Fluency in English of the applicant and staff
- Good documentation skills in English

Interested applicants are requested to contact the email address below to obtain "Request for Quotation (RFQ)", including Criteria & Terms of Reference. The PRECIDA-UOJ evaluates all applied proposals and credentials in the submitted RFQ and supporting documents.

- Request the documents for RFQ to precidaps1@gmail.com with a title "Request for RFQ (Rent-a-car)"
- Closing date and time for the Request is 12:00 pm on March 16 (Monday), 2026

**PRECIDA-UOJ**
Project for Research & Education Capacity Improvement in Dry Zone Agriculture at University of Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமெரிக்காவின்

# தரைவழிப் படையெடுப்பை எதிர்கொள்வதற்குத் தயார்!

## ஈரானிய வெளிவிவகார அமைச்சர் அறிவிப்பு

**தெஹ்ரோன், மார்ச் 11**
**அமெரிக்காவின் தரைவழிப் படையெடுப்பை எதிர்கொள்ளத் தயாராக உள்ளதாக, ஈரானிய வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அரக்சி தெரிவித்துள்ளார்.**

ஈரான் மீது தரைவழிப் படையெடுப்பை மேற்கொள்ளும் நோக்கம் தற்போதில்லை என்றும், தேவைப்படின் அதுதொடர்பில் பரிசீலிக்கப்படும் எனவும் அதிபர் ட்ரம்ப் அண்மையில் தெரிவித்திருந்தார். இதற்குப் பதிலடியாகவே, அமைச்சர் அப்பாஸ் அரக்சி இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-
ஈரானுக்குள் அமெரிக்கப் படைகள் நுழைவது தொடர்பில் எமக்கு எந்தக் கலக்கமும் இல்லை. உண்மையைச் சொல்வதாயின், நாங்கள் அவர்களுக்காகக் காத்திருக்கின்றோம். அமெரிக்காவின் தரைவழிப் படையெடுப்பை எதிர்கொள்வதற்கு ஈரானிய இராணுவம் முழுப் பலத்துடன் தயாராக உள்ளது. ஈரானுக்குள் தரைவழியாக ஊடுருவினால், அது அமெரிக்கப் படைகளுக்குப் பேரழிவாக அமையும். இது அவர்களுக்கும் தெரியும்-என்றார். (ம)

## பா.ஜ.க.வை வீழ்த்துவது தமிழர்களின் கடமையே!

சென்னை, மார்ச் 11
பா.ஜ.க.வைத் தோற்கடிப்பது தமிழகத்தின் தலையாய கடமை என்று, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியஸ்தர் வீரபாண்டியன் தெரிவித்துள்ளார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடு சென்னையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.
இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது-
இந்தியாவிலேயே தமிழகம்தான் நல்லிணக்க பூமியாக உள்ளது. தமிழகத்தில் வன்முறைகளும், மதப் பதற்றங்களும் இருக்கின்றன. எனினும், ஒப்பீட்டளவில் தமிழகத்தில் வன்முறைகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. பெரும்பான்மையினரான இந்துமக்கள்தான், சிறுபான்மையினரின் அரணாக உள்ளனர்.
தமிழகத்தின் மத நல்லிணக்கம் பா.ஜ.க.வின் கண்களைத் துருத்துகின்றது. இதனால், தமிழகத்தின் ஒற்றுமையைச் சிதைப்பதற்கு அவர்கள் பல்வேறு சதிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அந்தச் சதிகளுக்கு தமிழக மக்கள் இடமளிக்கக்கூடாது-என்றார். (ம)

## கருணாநிதியும், ஜெயலலிதாவும் கலந்த கலவையாம் ஸ்டாலின்!

### ஓ.பன்னீர்செல்வம் புகழாரம்

சென்னை, மார்ச் 11
கருணாநிதியின் ஞானமும், ஜெயலலிதாவின் வேகமும் முதல்வர் ஸ்டாலினிடம் உள்ளது என்று, தமிழக முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.
அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்டிருந்த பன்னீர்செல்வம் அண்மையில் தி.மு.க.வில் இணைந்தார். அவர் தலைமையிலான குழுவை தி.மு.க.வில் இணைக்கும் விழா மதுரையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அங்கு உரையாற்றும்போதே, கருணாநிதியும், ஜெயலலிதாவும் கலந்த கலவையாக முதல்வர் ஸ்டாலின் உள்ளார் என்று கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது-
எம்.ஜி.ஆரால் தொடங்கப்பட்ட அ.தி.மு.க, இன்று அ.தி.மு.க.வாக இல்லை. தொண்டர்கள்தான் தலைமையைத் தெரிந்தெடுக்கவேண்டும் என்ற அடிப்படை விதிகளைக்கூட திருத்தியுள்ளனர். அந்தக் கட்சி 'அபகரிப்புத் திராவிட முன்னேற்றக் கழகமாக' மாறியுள்ளது.
ஒரு தனிநபரின் சுயநலத்தால் அ.தி.மு.க முற்றாக அழிந்து இனியும் அந்த இயக்கத்தில் பயணிப்பது தன்மானத்துக்குக் கேடானது என்பதுடன், திராவிட அரசியலுக்கும் மாறானது. இதை உணர்ந்துதான் தி.மு.க.வில் இணைந்துள்ளேன்-என்றார். (ம)





## மத்திய கிழக்குப் போர்; மத்தியஸ்தம் செய்யுமாறு இந்தியாவுக்கு அழைப்பு!

### நெதன்யாகுவின் நட்பை பயன்படுத்துவாரா மோடி?

தெஹ்ரோன், மார்ச் 11
மத்திய கிழக்கில் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட இந்தியாவின் உதவியை ஈரான் நாடியுள்ளது என்று, நம்பகரமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.
கடந்த 72 மணிநேரப் போரில் ஈரான் ஏராளமான இழப்புகளைச் சந்தித்துள்ளது. ஈரானின் ஏவுகணைத் தளங்களில் கணிசமானவை அழிக்கப்பட்டுள்ள நிலையில், விரைவில் அந்த நாடு பேரழிவைச் சந்திக்கும் நிலை ஏற்படும் என்று போரியல் வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதையடுத்தே, போரில் தலையிட்டு சமாதான முயற்சிகளை முன்னெடுக்குமாறு இந்தியாவை ஈரான் கோரியுள்ளது.
தற்போதுள்ள உலகத் தலைவர்களில், இந்தியப் பிரதமர் மோடி மட்டுமே இஸ்ரேலியப் பிரதமர் நெதன்யாகு மற்றும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இருவருடனும் நெருங்கிய நட்பில் உள்ளார். இந்தப் பின்னணியிலேயே, போர் நிறுத்தத்துக்கு இந்தியாவின் உதவியை ஈரான் கோரியுள்ளது என்று போரியல் வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். ஈரானின் பிரதான துறைமுகங்கள் அனைத்தும் இஸ்ரேலினதும் அமெரிக்காவினதும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. எனினும், ஈரானில் இந்தியாவால் நிர்வகிக்கப்படும் சபாஹர் துறைமுகம் மீது இதுவரை தாக்குதல் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## தி.மு.க.வின் ஆட்சி தரம்கெட்டது

### சீமான் விளாசல்



சென்னை, மார்ச் 11
தி.மு.க.வின் ஆட்சி தரம்கெட்டது என்பதாலேயே, அங்கு கூட்டணிக் கட்சிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது என்று, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் விமர்சித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது-
தி.மு.க.வின் கூட்டணியில் 21 கட்சிகள் இணைந்துள்ளன. நல்லாட்சியைக் கொடுக்கும் கட்சிக்கு ஏன் இவ்வளவு பிரமாண்டமான கூட்டணி? தமது ஆட்சியில் நம்பிக்கை இல்லை என்பதாலேயே, தேர்தலை எதிர்கொள்வதற்கு தி.மு.க.வினருக்கு இருபதுக்கும் மேற்பட்ட கட்சிகளின் துணை தேவைப்படுகின்றது.
தமிழக வெற்றிக் கழகத்தைச் சுற்றி இன்று ஏராளமான சர்ச்சைகள் உள்ளன. தவறை உணர்ந்து, அதைத் திருத்திக்கொள்வதற்கு மனப்பக்குவம் தேவை. விஜய்க்கும் அவருடைய தொண்டர்களுக்கும் அந்தப் பக்குவம் இல்லை. இத்தகைய நபர்களால் சிறந்த அரசியலை வழங்கமுடியாது-என்றார். (ம)

## அமைதிக்கான வாய்ப்பை ஒருமுறையேனும் தருக!

### வோல்கர் ட்ரக் கோரிக்கை

ஜெனீவா, மார்ச் 11
மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்துவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்கவேண்டும் என்று, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக் அழைப்பு விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது-
மத்திய கிழக்கில் தற்போது பற்றியெரியும் நெருப்பை, மேலும் வீரியம் பெறச்செய்யும் நடவடிக்கைகளே பரவலாக இடம்பெற்று வருகின்றன. நெருப்பை அணைப்பதற்கான முயற்சிகளே இன்றைய காலச்சூழலில் தேவை. எனவே, உலகத்தலைவர்கள் தமது பொறுப்புணர்ந்து செயற்படவேண்டும். மோதலில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்புகளும், அமைதியை ஏற்படுத்துவதற்கு எமக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கவேண்டும். அமைதிக்கான கதவுகள் மூடப்படக்கூடாது-என்றார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் இன்று பிற்பகல் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் கே.தவகீஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவர் தே.குலேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-17)

# பழுதடைந்த உணவு மன்னாரில் அழிப்பு

## வர்த்தக நிலையத்துக்குத் தண்டம்

மன்னார், மார்ச் 11

மன்னார் நகரில் முறையான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் உணவுப் பொருள்களைக் களஞ்சியப் படுத்திய பிரபல வர்த்தக நிலையம் ஒன்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குக் கடந்த வாரம் பொதுமக்கள் வழங்கிய முறைப்பாடுகளுக்கு அமைவாக உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் திடீர்ச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மன்னார் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி ரூபன் லெம்பேட் தலைமையில், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் நகரசபைச் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து இந்தச் சோதனையை முன்னெடுத்தனர்.

சோதனையின்போது வர்த்தக நிலையமொன்றில் திகதி முடிந்த உணவுப் பொருள்கள் விற்பனைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை, அழுகிய நிலையில் இருந்த மரக்கறிகள் மற்றும் பழங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை, உணவுப் பொருள்களைப் பாதுகாப்பற்ற முறையில் சேமித்து வைத்திருந்தமை என்பன கண்டறியப்பட்டன. அதனையடுத்து சுகாதாரப் பிரிவினரால் குறித்த வர்த்தக நிலையத்துக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வர்த்தக நிலையத்துக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதித்ததுடன் கைப்பற்றப்பட்ட அனைத்து உணவுப்பொருள்களையும் உடனடியாக அழிக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ச-56)



### நகர்ப்புறப்...

தொடர்ந்து, முக்கியத்துவம் கருதிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள், மற்றும் இறங்கு துறைகளுக்கே விநியோகம் இடம்பெற்றது. இவ்வாறான நிலையிலேயே தற்போது நகர்ப்புற எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான விநியோகம் ஆரம்பமாகியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் தினங்களிலும் இந்த விநியோகப் பணிகள் தொடரவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-17)

### மின்சக்தி...

ஆதலால், அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிராக விரைவில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படும்.

சுகாதார அமைச்சராக இருந்த கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை வந்தபோது, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மனச்சாட்சிக்கு அமைய செயற்பட வேண்டும் என்று ஜே.வி.பி.யினர் கோரியிருந்தனர். அதேகோரிக்கையைத்தான் தற்போது நாமும் முன்வைக்கின்றோம். மின்சக்தி அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது ஜே.வி.பி. நாடாளுமன்றஉறுப்பினர்கள் அனைவரும் பொறுப்புணர்வுடனும், மனசாட்சிக்கு அமையவும் செயற்படவேண்டும் - என்றார். (அ-ம)

### பொருளாதார...

றது. இதன்போது அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்ததாவது:-

மத்திய கிழக்கில் தற்போது நிலவும் போர்ச் சூழலால் நாட்டின் பொருளாதாரம் பாதிப்புக்கு உள்ளாகும் நிலைமைகள் தென்படத் தொடங்கியுள்ளன. இந்த நிச்சயமற்ற நிலைமைகள் நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். எனவே, இந்த விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் அனில் ஜயந்த தலைமையிலேயே இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மத்திய கிழக்குப் போரால் ஏற்படும் பாதிப்பைத் தொடர்ச்சியாகக் கண்காணித்தல், பல்வேறு துறைகளில் ஏற்படக்கூடிய நெருக்கடிகளை மதிப்பீடு செய்தல், உலகின் போக்குக்கு ஏற்ப மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களைப் பரிந்துரைத்தல் என்பன அந்தக் குழுவின் பிரதான பணிகளாக அமையும் - என்றார். (அ-ம-44)

### மார்ச் 30ஆம்...

எது. 1990ஆம் ஆண்டு புனித ஹஜ் யாத்திரையை நிறைவு செய்துவிட்டு, கல்முனை வழியாக காத்தான்குடிக்கு பயணித்த முஸ்லிம்கள், ஆயுததாரிகளால் இடைமறிக்கப்பட்டு குருக்கள்மடத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டனர். இந்தப் படுகொலைகள் தொடர்பான வழக்கு விசாரணை களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதன் போதே, மனிதப் புதைகுழியாகக் கருதப்படும் இடத்தில் எதிர்வரும் 30ஆம் திகதி அகழ்வுப் பணிகளை ஆரம்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

புதைகுழி அகழ்வுக்கான நிதி தொடர்பில் நீதிமன்றத்தின் ஊடாகக் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில், உரிய நிதியொதுக்கீடு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதையடுத்தே, அகழ்வுப் பணிகளுக்கு திகதி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

### எரிபொருள்...

தாவது:-

எரிபொருள் விநியோகத்தில் உலகளாவிய நெருக்கடி நிலை விரைவாக ஏற்பட்டு வருகின்றது. எனவே, பொதுமக்கள் தேவையற்ற பயணங்களைக் கைவிட்டு, மிகுந்த சிக்கனமாக எரிபொருள்களைப் பயன்படுத்த வேண்டும். எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சத்தில் பொதுமக்கள் அதிகளவில் எரிபொருளைக் கொள்வனவு செய்தமையும் இந்தப் பற்றாக்குறைக்கும், விலையேற்றத்துக்கும் முக்கியமான காரணமாகும் - என்றார். (அ-ம)

### யாழ்...

ஸ்ரீலங்காவின் சுதந்திரதினத்தை கரிநாளாக அறிவித்து தமிழர் தாயகத்தில் இம்முறை போராட்டங்களும் பேரணிகளும் முன்னெடுக்கப்பட்டன. இந்தப் போராட்டத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கறுப்புக்கொடி பறக்க விடப்பட்டிருந்தது. அத்துடன், தேசியக் கொடியைக் கீழிறக்கி பதிலாகக் கறுப்புக் கொடியும் ஏற்றப்பட்டது. இதை, 'நாட்டின் இறைமைக்கு குந்தகம் விளைவிக்கும் குற்றம்' என்று கருதியே தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு நேற்று நேரில் சென்றிருந்த யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் இந்த விடயங்கள் தொடர்பில் துணைவேந்தர் பேராசிரியர் சற்குணராஜா, பதிவாளர், பாதுகாப்புத் தரப்பின் பிரதானி உள்ளிட்டோரிடம் விசாரணை நடத்தி வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர். இதேவேளை, கடந்த வருடமும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தேசியக் கொடி இறக்கப்பட்டு கறுப்புக்கொடி ஏற்றப்பட்ட நிலையில், அது தொடர்பிலும் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் விரிவான விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

தேசியக் கொடியைக் கீழிறக்கி கறுப்புக் கொடியை ஏற்றிய மாணவர்கள் சிலர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்ய நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன இதற்காக சட்டமாஅதிபரின் ஆலோசனை பெறப்படவுள்ளது என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதேவேளை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அண்மைய கூட்டத்திலும் இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டிருந்ததுடன், கறுப்புக்கொடி ஏற்றிய மாணவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை மேற்கொள் எதிர்பார்க்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### தகவல்கள்...

தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தாக்குதல் நடத்திய தரப்போ அல்லது தாக்குதலுக்கு உள்ளான தரப்போ எமக்கு எவ்விதத் தகவலையும் வழங்கவில்லை. இரு நாடுகளுக்கிடையிலான போரின்போது ஒரு நாட்டின் மீதான தாக்குதலை மூன்றாவது நாட்டுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை. அந்தப் பகுதியில் சில சடலங்கள் மற்றும் உயிர் காக்கும் அங்கிகள் மிதப்பதாகவே எமக்குத் தகவல் கிடைத்தது. அதற்கு அமையவே மீட்புப் பணிகள் இடம்பெற்றன - என்றார். (அ-ம-44)

### ஊர்காவற்றுறையில்...

திங்கட்கிழமை இரவு அத்துமீறி நுழைந்த இளைஞரொருவர் ஆலய விக்கிரகமொன்றைச் சேதப்படுத்தியிருந்தார். இதையடுத்து, ஆலயத்தில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமரா பதிவுகளின் அடிப்படையில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகநபரை நேற்றுக் கைது செய்தனர். அவரை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-66)

### பாலைதீவுப்...

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இறப்பு விசாரணை அதிகாரி வின்சர் அன்ரலா மேற்கொண்டார். (அ-ம-26)

### யாழ்.போதனாவில்...

மனையின் குருதி வங்கிக்கு நேரடியாக வருகைதந்து குருதிக்கொடை வழங்கி உயிர்காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குருதி வங்கிப் பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்பாசி வளர்ப்புத் தொழிற்றுறை வடக்கு-கிழக்குக்கு கைகொடுக்கும்

## சர்வதேச கடல்பாசி மாநாட்டில் சுட்டிக்காட்டு

**இந்தியா, மார்ச் 11**

**வடக்கு - கிழக்கு மாகாணங்களின் கடலோர மக்களின் வாழ்வாதாரத்தை மாற்றியமைக்கக்கூடிய வகையில் ஒரு சக்தியாக கடல்பாசி தொழிற்றுறை கைகொடுக்கும் என்று இந்தியாவில் நடைபெற்ற 7 ஆவது சர்வதேச கடல்பாசி உச்சிமாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இந்தியாவின் கோச்சியில் நடைபெற்ற இந்த மாநாட்டில், இலங்கை மற்றும் மாலைதீவுகள் சார்பாகக் கடல்பாசித் துறை ஆலோசகர் குலேந்திரன் சிவராம் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்ததாவது-

வடக்கு-கிழக்கு கடலோரப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் மீன்பிடியையே நம்பியுள்ளன. எனினும், காலநிலை மாற்றம், கடல் வெப்பநிலை உயர்வு மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாகப் பாரம்பரிய மீன்பிடித்தொழில் சவாலுக்கு உள்ளாகியுள்ளது.

சூழல் நட்பு வாழ்வாதாரம் என அழைக்கப்படும் கடல்பாசி வளர்ப்பு, கடலோர மக்களுக்கு நிலையான மாற்றுவருமானத்தை வழங்கும்.

இலங்கையில் கடல்பாசி வளர்ப்பு ஒரு சிறு முயற்சியாகத் தொடங்கி, இன்று ஒரு சமூக அடிப்படையிலான வாழ்வாதார முறையாக மாறியுள்ளது. குறிப்பாகப் போரால் பாதிக்கப்பட்ட மற்றும் பெண்கள் தலைமையிலான குடும்பங்களுக்கு இது ஒரு கௌரவமான வருமானத்தை ஈட்டித் தருகிறது.

இலங்கை வெறும் மூலப்பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடாக மட்டும் இருக்கக்கூடாது.

மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகளை உருவாக்கி, உலக சந்தையில் தனது முத்திரையைப் பதிக்கவேண்டும்-என்றார். (ச-20)

வேலையாட்கள் தேவை
மாதினி மாதுளை
தோட்ட வேலைக்கு ஆட்கள் தேவை.
1 நாள் சம்பளம் - 2500/-
தங்கி நின்று வேலை செய்பவர்களுக்கு
3 நேர சாப்பாடு வழங்கப்படும்
வேலை நேரம் - 8 மணித்தியாலம்
வேலை செய்யும் இடம் - முகமாலை
தொடர்புகளுக்கு:-
077 068 5214

# எகிறியது எரிவாயு விலை!

*கொழும்பு, மார்ச் 11*

*நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்குவரும் வகையில் எரிவாயு விலை அதிகரித்துள்ளது என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.*

*இதன்படி, 12.5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 300 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் புதிய விலை 3 ஆயிரத்து 990 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.*

*இதேவேளை, 5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 120 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் புதிய விலை ஆயிரத்து 602 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.*

*2.3 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 56 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் புதிய விலை 750 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.* (ம)



# இரத்ததானம்

மன்னார், மார்ச் 11

'உதிரம் கொடுத்து உயிர் காப்போம்' என்ற கருப்பொருளுக்கமைய மன்னார் மறைமாவட்ட ஜோசப்வாஸ் நகர் நற்கருணை ஆண்டவர் ஆலய பங்கு பணிமனையில் இரத்ததான நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

கத்தோலிக்க இறைமக்கள் தற்பொழுது அனுஷ்டித்துவரும் கிறிஸ்துவின் பாடுகளை நினைவுகூரும் முகமாக இந்த இரத்ததான நிகழ்வு நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்பணி ம. ஜெயபாலன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஆண்கள், பெண்கள் என 122 நபர்கள் கலந்துகொண்டனர். (41-60)


# மீண்டெழும் மொட்டு; ஏப்ரலில் மாற்றங்கள்

கொழும்பு, மார்ச் 11

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை மீண்டும் ஒரு பலமிக்க அரசியல் சக்தியாக மாற்றும் நோக்கில், எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் நாடு தழுவிய ரீதியில் மறுசீரமைப்புப் பணிகளை முன்னெடுக்க அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கட்சியின் அரசியல் சபை மற்றும் செயற்குழுக் கூட்டத்தில் இதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. கட்சியின் கட்டமைப்பில் மாற்றங்களைக் கொண்டுவரும் வகையில் பின்வரும் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர்கள், உபதலைவர்கள் மற்றும் பிரதிச் செயலாளர்கள் உள்ளிட்ட உயர்மட்டப் பதவிகளுக்குப் புதிய நிர்வாகிகளை நியமிக்கச் செயற்குழு ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஏப்ரல் மாதம் முதல் கிராம மட்டத்திலுள்ள கிளைச் சங்கங்களை மீளமைத்து, புதிய உறுப்பினர்களை உள்வாங்கும் வேலைத்திட்டம் தீவிரப்படுத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



கத்தோலிக்க திருச்சபை நினைவுகூரும் தவக்காலத்தை முன்னிட்டு மன்னார் மறைமாவட்டத்தின் மறைவாழ்வு பணியாளர்களுக்கான வருடாந்த தவக்காலத் தியானம் மன்னார் உயிலங்குளம் கள்ளிக்கட்டைக்காடு இறை இரக்க தியான இல்லத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. (ச-60)

யாழ்ப்பாண மாவட்ட

# வலைப்பந்தாட்டத் தொடரில் இராமநாதன் கல்லூரி சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 11

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் ஏற்பாடு செய்த 16 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரில், யாழ். இராமநாதன் மகளிர் கல்லூரி அணி வெற்றி பெற்று சம்பியனை சுவீகரித்துள்ளது.

இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இறுதியாட்டத்தில், இராமநாதன் மகளிர் கல்லூரி அணியும் அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரி அணியும் மோதின.

போட்டியின் ஆரம்பம் முதலே இரு அணிகளும் சமபலத்துடன் மோதிக்கொண்டன. ஆட்ட நேர முடிவில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணி 16:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று மகுடம் சூடியது. தொடர்ந்து யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவா எஸ். மனோன்மணி தலைமையில் கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது. (ச-422)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.03. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.